EMERGENCY

# எமர்ஜென்ஸி

Pastor. S.ROMILTON

உபத்திரவக் காலக்கட்டத்துக்கு ஆயத்தப்படுவது எப்படி ?






புத்தகங்கள் கிடைக்குமிடம்

அடைபட்ட அக்கினி

246-B, POCKET-C, MAYUR VIHAR,
PHASE-2, DELHI-110 091.
MOB: 98106 46981 / 99901 03010

# உள்ளே


1. உபத்திரவத்துக்கும் அந்தரங்க தலைமறை சபைகளின் காலம் ஒன்றுக்கும் ஆயத்தமாகும் காலம் இது — 07

2. சபைக்கு வருகிறது ஒரு எமர்ஜென்ஸி — 23

3. உபத்திரவக்காலத்தைக் குறித்த ஐந்து முக்கிய சத்தியங்கள் — 32

4. உபத்திரவக் காலங்களை எதிர்பார்த்து சபையை அதற்காகப் பயிற்சியுங்கள் — 34

5. உபத்திரவக் காலத்துக்கு நமது குடும்பங்களை ஆயத்தப்படுத்துவது எப்படி? — 36

6. உபத்திரவங்களுக்கு ஆயத்தப்படுதல் — 39

7. அவர் என்னைச் சோதித்தபின் பொன்னாக விளங்குவேன் — 41

8. உபத்திரவக் காலத்துக்கு முன்பாக மனப்பாடம் செய்து வைத்திருக்க வேண்டிய வேத பகுதிகள் — 43


அடைபட்ட
அக்கினி

# எமர்ஜென்ஸி

வேதம் முழுவதுமாகவே அவ்வப்போது வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு காரியங்களுக்காகத் தமது ஜனங்களை தேவன் ஆயத்தப்படுத்தி வந்திருக்கிறார்.

ஜலப்பிரளயத்துக்கு முன்பாக நோவாவை ஆயத்தப்படுத்தியவர், பஞ்சக்காலத்துக்கு முன்பாக யோசேப்பை ஆயத்தப்படுத்தியவர், மிகப்பெரிய விடுதலை ஒன்றுக்கு முன்பாக மோசேயை ஆயத்தப்படுத்தியவர், ஆமானின் சதியை முறியடுத்துத் தமது ஜனத்தை உயிரோடு காக்க எஸ்தரைக் கொண்டு ஆயத்தப்பத்தியவர், தேசத்தின் எழுப்புதலுக்காக எலியாவை ஆயத்தப்படுத்தியவர், கிறிஸ்து இயேசுவின் முதலாம் வருகைக்காக யோவான் ஸ்நானகனைக் கொண்டு வழியை ஆயத்தப்படுத்தியவர், அவரது இரண்டாம் வருகைக்கு நம்மை ஆயத்தப்படவும், மற்றவர்களை ஆயத்தப்படுத்தவும் சொன்னவர், தேசத்தில் நடக்கப்போகும் காரியங்களுக்காக நம்மை இந்த நாட்களில் துரிதம் துரிதமாய் ஆயத்தப்படுத்திக் கொண்டேயிருக்கிறார்.

தங்கள் விசுவாசத்துக்காகப் பல தேசங்களிலுள்ள விசுவாசிகள் பாடுகளின் ஊடாகவும், உபத்திரவங்கள், நெருக்கங்கள், சிறைவாசங்கள் மற்றும் கிறிஸ்துவுக்காக மரிக்க வேண்டிய நிலை ஒன்றின் வழியாகவும் கடந்து போயுள்ளனர். ஆனால் அப்படிப்பட்ட காலங்கள் வருமுன்பாகவே தேவன் அந்தந்த நாட்டிலுள்ளவர்களை அந்த நாட்களுக்காக ஆயத்தப்படுத்தி வந்திருக்கிறார்.

மாவோ கம்யூனிஸ்ட்டுகளின் கைகளில் சீனா விழும் முன்பாக வாட்ச்மன் நீ, விட்னஸ் லீ மற்றும் பிரதர் யூன் மூலமாகவும், ருமேனியா ரஷ்ய கம்யூனிஸ்ட்டுகளின் கையில் விழும் முன்பாக ரிச்சர்ட் உம்பிராண்ட் மூலமாகவும், ஜெர்மனியில் ஹிட்லரின் ஆட்சிக்கு முன்பாக மார்ட்டின் நிமோல்லர் மற்றும் டியட்ரிச் போனஃபர் மூலமாகவும் தம்முடைய ஜனத்தை எச்சரித்து ஆயத்தப்படுத்தியவர், வரப்போகும் நாட்களுக்காக நமது இந்திய சபைகளை ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறார். அப்படியானால் வரப்போகும் பிரளயம் ஒன்றுக்கு,

*நான் எப்படி ஆயத்தப்பட வேண்டும்?*

*என் குடும்பத்தை எப்படி ஆயத்தப்படுத்த வேண்டும்?*

*என் சபையை எப்படி ஆயத்தப்படுத்த வேண்டும் ?*

*ஊழியர்களை எப்படி ஆயத்தப்படுத்த வேண்டும் ?*

*இன்றைய இந்தியக் கிறிஸ்தவத்தை எப்படி எச்சரித்து ஆயத்தப்படுத்த வேண்டும் ?*

இதுவே இப்புத்தகத்தின் நோக்கம்.

**- Pr. Romilton**

Chapter 1

## உபத்திரவத்துக்கும் அந்தரங்க தலைமறை சபைகளின் காலம் ஒன்றுக்கும் ஆயத்தமாகும் காலம் இது !

**Preparing For The Underground Church**

*Article By* Rev. **Richard Wurmbrand**

ஏற்கனவே சுவிசேஷத்துக்குத் தங்கள் கதவுகளை இறுக மூடிக்கொண்ட நாடுகளிலுள்ள விசுவாசிகள் தலைமறைவாகும்படி தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. அவர்கள் ஏற்கனவே கடும் உபத்திரவத்தின் மத்தியில் வேட்டையாடப்பட்டு உளவுத்துறையின் கண்கொத்திப் பாம்புக் கண்களிலிருந்து தலைமறைவு வாழ்வு ஒன்றையே வாழ்ந்து கொண்டுதான் வருகிறார்கள்.

மேலை நாடுகளைப் போன்ற மற்ற நாடுகளின் மதக் கலாச்சாரத்தில் அந்தரங்க சபைகளைப் பற்றிய அறிதலோ, அவர்கள் படும் கடும் உபத்திரவங்களைப் பற்றின புரிந்து கொள்தலோ பெரும்பாலும் இருப்பதே இல்லை. அவ்வப்போது அந்தந்த நாடுகளுக்குக் கிடைக்கும் அரிதான வீடியோ க்ளிப்பிங்களோ அல்லது புத்தகங்களோ, செய்திகளோ அல்லது அந்த நாடுகளுக்கு அவர்கள் சென்று வரும் பயணங்களோ சில விபரங்கள் தரலாம். இவற்றை, தமது வருகைக்கு முன்னான உபத்திரவ காலக்கட்டத்தைக் குறித்து நமது ஆண்டவர் சொன்ன எச்சரிப்பின் வார்த்தைகளோடு இணைத்துப் பார்த்து, அப்படிப்பட்ட காலக்கட்டத்துக்கு நாம் நம்மை ஆயத்தப்படுத்திக்கொள்வது நமக்கு அவசியம்.

போதகர் ரிச்சர்ட் உம்பிராண்டும் அவரது மனைவி சபீனாவும், தங்கள் தேசமாகிய ருமேனியாவின் மேல் கார்மேகமாய் இறங்கிய கம்யூனிசத்தின் ஆபத்தையும் அது தேசத்தை எப்படி விழுங்கப்போகிறது என்பதையும் முன் கண்டு ருமேனிய சபைகளை மிக வேகமாக ஆயத்தப்படுத்தினர். கம்யூனிசக் கிறிஸ்தவ மாநாடு ஒன்றில் கிறிஸ்துவுக்காகத் துணிந்து நின்று சுவிசேஷத்தைப் பறைசாற்றியதற்காக 14 வருடங்களை சிறையில் கழித்தார் உம்பிராண்ட். அவரது மனைவியும் 3 ஆண்டுகள் கான்ஸென்ட்ரேஷன் கேம்ப்பில் அடைக்கப்பட்டார்.

அவரால் எழுதப்பட்ட இந்தக் கட்டுரை நம்மை ஆவிக்குரிய வகையிலும், உணர்ச்சிபூர்வமான மனோநிலையிலும், , சரீரப்பிரகாரமாகவும் அப்படிப்பட்ட காலங்களுக்கு ஆயத்தப்பட நம்மை அறைகூவி அழைக்கிறது.

## 1. உபத்திரவம் அனுபவிக்க ஆயத்தப்பட்டுக் கொள்ளுங்கள்:

***1:1 உபத்திரவம் திடீரென்று கட்டவிழ்த்து விடப்படும் அந்த நாள் :***

திடீரென்று ஒரு நாள் ஏதோ ஒரு தடையுத்தரவின் மூலம் மிகப்பெரிய உபத்திரவம் ஒன்று தேசத்தின் மேல் கட்டவிழ்த்துவிடப்படும்.

***1:2 ஒருவரும் அறியாதவண்ணம்:***

ஒருவர் கைது செய்யப்படுவதை மற்றவர் அறியாதவண்ணம் கைது நடவடிக்கைகளை மிக இரகசியாய் நடத்தியது சோவியத் உளவுத்துறை. இதைப் போன்ற நடவடிக்கைகளே மற்ற நாடுகளிலும் நடக்கும்.

***1:3 பயப்பட வேண்டியதில்லை :***

தான் சிறையில் அடைக்கப்படுவதால் உண்மைக் கிறிஸ்தவன் ஒருவன் பயந்து விடுவதில்லை.

***1:4 சிறைச்சாலை சாட்சிகள்:***

கிறிஸ்துவுக்காக சாட்சி சொல்ல சிறை என்பது ஒரு புது இடமும் புது அனுபவமுமாய் இருக்கும்

***1:5 கடிகாரம் காணமுடியா காலம்:***

கைக்கடிகாரங்கள் கைகளிலிருந்து கழற்றப்பட்டு, நாளும் நேரமும் தெரியாமல் போகும் ஒரு இருண்ட காலம் அது!

***1:6 மனரீதியான, உடல்ரீதியான, ஆவிக்குரிய அளவிலான ஆயத்தங்கள் :***

எப்படிப்பட்ட நிகழ்வுகளுக்கும், உபத்திரவ சித்ரவதைகளுக்கும் மனதளவிலும் உடலளவிலும் ஆவிக்குரிய அளவிலும் முன்னதாகவே ஆயத்தப்பட்டுக்கொள்ளுதல் அவசியம்.

## 2. வாஸ்தவத்தைப் பற்றிய உண்மை:

### *2:1 சபையின் எந்தவொரு நபரும் காட்டிக்கொடுப்பவராய் மாறலாம்:*

எப்படிப்பட்ட வரம்பெற்ற ஆவிக்குரிய ஊழியரோ, ஆராதனை வீரரோ கூட காட்டிக் கொடுப்பவராய் மாறுவர். ருமேனியாவின் மிகச்சிறந்த ஆவிக்குரிய பாடலாசிரியர் ஒருவர் கம்யூனிசப் பாடலாசிரியராய் மாறினார்.

### *2:2 சிறையில் சிலுவையில் அறையப்பட்டவர்கள் :*

விசுவாசிகள் சிலுவையில் கட்டப்பட்டு நான்கு நாட்களாகத் தரையில் கிடத்தப்பட்டு, அவர்களது முகத்தின் மேலும் உடலின் மேலும் மலமும் நீரும் மற்ற கைதிகளால் கழிக்கப்பட அடித்து வற்புறுத்தப்பட்டனர்.

### *2:3 வேத புத்தகம் அல்ல, வேதத்தின் கர்த்தரே ! :*

வேத வசனங்கள் கூட சிலவேளைகளில் சிறைகளில் உதவிக்கு வருவதில்லை. நீங்கள் படித்திருக்கும் சங்கீதம் அல்ல, உங்களை பெலப்படுத்த கர்த்தரே அங்கு இறங்கி வருவார். சங்கீதம் யாரைப் பற்றிப் பேசுகிறதோ அவரையே நீங்கள் உங்களோடு வைத்திருக்க வேண்டும்.

## 3. ஆவிக்குரிய பயிற்சிகள்:

### *3:1 .மிருகக்காட்சி சாலையும் சிங்கங்களும் உபத்திரவங்களும் :*

உங்கள் பிள்ளைகளை மிருகக்காட்சி சாலைகளுக்கு அழைத்துச் சென்று அங்கே கூண்டில் அடைக்கப்பட்டிருக்கும் சிங்கங்களைக் காட்டி, 'பிள்ளைகளே, நமது விசுவாச முற்பிதாக்கள் தங்கள் விசுவாசத்துக்காக இப்படிப்பட்ட வனவிலங்குகளுக்கு முன்பாகத்தான் தூக்கியெறியப் பட்டனர் என்பது உங்களுக்குத் தெரியுமா? நீங்களும் கூட உபத்திரவப் படுத்தப்படுவீர்கள். ஆனால் சிங்கங்களுக்கு இரையாக அல்ல, சிங்கங்களை விடக் கொடூரமான மனிதரின் கரங்களில் சித்ரவதைப் படுத்தப்படுவீர்கள். கிறிஸ்துவின் பட்சத்தில் நிற்க விரும்புவீர்களானால் இங்கு இப்பொழுதே உங்களை அர்ப்பணிக்கத் தீர்மானித்து விடுங்கள்..' என்று உங்கள் பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுத்து இப்பொழுதே அவர்களை மனதளவில் ஆயத்தப்படுத்திவிடுங்கள்.

## 3:2 சிறையிலே உங்களுக்கு ஒன்றும் கிடைக்காது :

சிறையில் நீங்கள் சகலத்தையும் இழந்து உரியப்பட்ட நிலையில் நிற்பீர்கள். உங்கள் ஆடைகள் களையப்பட்டு, கைதிகளின் ஆடைகள் கொடுக்கப்படும். உங்கள் வீட்டிலுள்ள நாற்காலிகளோ, கட்டில்களோ கம்பளங்களோ திரைச்சீலைகளோ ஒன்றும் அங்கே இருக்காது. உங்கள் மனைவியையும் பிள்ளைகளையும் விட்டு நிரந்தரமாய் நீங்கள் பிரிக்கப்படுவீர்கள். அங்கே புத்தக லைப்ரரி என்ன, ஒரு பூவைக் கூட நீங்கள் பார்க்க முடியாது. வாழ்வை மகிழ்விக்கும் ஒன்றும் அங்கே காணப்பட மாட்டாது.

## 3:3 உலக வசதிகளையும் ஆடம்பரங்களையும் இன்றே மறந்து துறந்துவிடுங்கள்:

முன்கூட்டியே உலக ஆசைகளையும் இச்சைகளையும் மகிழ்ச்சி விருப்பங்களையும் வசதிகளையும் துறந்துவிடாத ஒருவரை யாரும் எதிர்ப்பதே இல்லை. இவைகளையெல்லாம் இப்பொழுதே துறந்து மறந்துவிட தன்னையே தயார்படுத்திக்கொள்ளும் ஒரு விசுவாசி, சிறையில் இவைகளில் ஒன்றாவது கிடைக்காதபோது, அது இல்லையே என்ற எந்தவொரு வித்தியாசமுமின்றி, எப்போதும் போலிருப்பார். உணர்ச்சிபூர்வமான எந்தவொரு பிடிப்பும் இல்லாமலேயே இவ்வுலகப் பொருட்களைக் கையாள இப்பொழுதே கற்றுக்கொள்ளுங்கள்.

## 3:4 சூப்பர் மார்க்கெட்டின் பொருட்கள் எதுவும் இல்லாமல் வாழ்வது:

நீங்கள் ஒரு மாலுக்கோ சூப்பர் மார்க்கெட்டுக்கோ சென்று ஒவ்வொன்றாய்ப் பார்வையிட்டு, ‘இந்தப் பொருள் இல்லாமல் என்னால் இருக்க முடியாதா என்ன?’ என்று ஒரு பைசா கூட செலவழிக்காமல் திரும்பி வந்து பாருங்கள். அப்போது மிக அழகான பொருட்களைப் பார்த்த சந்தோஷம் மட்டுமல்ல, ‘இவைகளெல்லாம் இல்லாமல் கூட என்னால் சந்தோஷமாய் இருக்க முடியும்’ என்ற அதிலும் மேலான ஒரு சந்தோஷமும் உங்களுக்குள் தொற்றிக்கொள்வதைப் பார்ப்பீர்கள்.

## 4. சந்தேகங்கள் காட்டிக்கொடுக்கும் துரோகிகளை உருவாக்குகிறது :

### *4:1 தேவனைப் பற்றிய சந்தேகங்களுக்கு எதிர்த்து நில்லுங்கள்:*

நம் ஒவ்வொருவருக்கும் சந்தேகங்கள் வருவது இயல்பு. ஆனால் தேவன் ஒருவர் உண்டென்பதும், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் உண்மையாய் நடந்த ஒன்று என்பதும், நித்திய வாழ்வு என்ற ஒன்று நிச்சயமாய் உண்டு என்பதுமான வேதத்தின் அடிப்படை உண்மைகளை, உபதேசங்களைக் குறித்த சந்தேகங்களை மனதில் வரவிடவே வேண்டாம். அவைகள் உங்கள் சிந்தனைக்குள் கூடு கட்ட விட்டுவிடாதீர்கள்.

### *4:2 எல்லா சந்தேகங்களுக்கும் ஒரு தீர்வு உண்டு :*

சந்தேகங்களோடு வாழ்ந்து கொண்டிருக்க வேண்டாம்.
அவைகளுக்குத் தீர்வைத் தேடுங்கள் என்பதே சந்தேகங்களுக்கான தீர்வு.

## 5. சித்ரவதைகளின் சோதனை :

### *5:1 சித்ரவதைகள் உங்களை பெலப்படுத்தக்கூடும் :*

அது பழுக்கக் காய்ச்சிய கம்பிகளோ, சாதாரண பிரம்பு அடிகளோ எதுவாயிருந்தாலும் சித்ரவதை அது வலியும் வதையும் தான். அநேக சித்ரவதைகள் வகை வகையானவை. அவைகள் இரண்டு வகையிலும் கிரியை செய்ய முடியும். ஒன்று உங்களைக் கல்லாக்கி போலீசுக்கு எந்த உண்மையையும் வெளிப்படுத்தக் கூடாதென்கிற உங்கள் தீர்மானத்தில் உங்களை உறுதியாக்கிவிடும் அல்லது சகலத்தையும் உங்கள் வாயிலிருந்து கொட்ட வைத்துவிடும்.

### *5:2 சிந்தையைச் சிதைக்கும் மின்சாரக் கதிர்கள் :*

ஒரு சிறை அறைக்குள் பாய்ச்சப்படும் மின்சாரக் காந்தக் கதிர்கள், அதிர்வலைகள் உங்கள் சிந்தையைச் சிதைக்கும் ஆற்றலுள்ளவைகள். ‘உன் பெயர் ஜோசப் தானே?’ ‘நீ ஜோசப் இல்லையா?’ என்று இரவும் பகலும் இடைவிடாமல் கேட்டுக்கொண்டேயிருக்கும் ஒலிப்பெருக்கிகள் உங்கள் செவிகளைச் செவிடாக்கி ஆளைப் பைத்தியமாக்கி விடக்கூடும்.

*5:3 கொல்லும் சித்ரவதைகளைக் காட்டிலும் தேவன் மகா பெலமும் வல்லமையும் உள்ளவர் :*

*அவர்கள் போரிடுவது உங்களுக்குள்ளே உள்ள கிறிஸ்துவுக்கு எதிராகவும் தேவனுக்கு எதிராகவுமே ! பிசாசு தேவனைப் போல சர்வ வல்லவனுமல்ல, சர்வ ஞானியுமல்ல, சர்வ வியாபியுமல்ல. அவன் தனது காரியங்களில் தவறு செய்யத்தான் செய்கிறான். கொல்லும் கொடிய சித்ரவதைகள் அளவு மீறிப்போனாலும் அவைகளை ஆவிக்குரிய பிரகாரமாய் மிக அழகாய்ப் பயன்படுத்திக் கொள்ளமுடியும்.*

## 6. நெருக்கத்தின் நேரங்கள் :

*6:1 நெருக்கங்களின் ஒரு விநாடி :*

*சித்ரவதையின் உச்சத்தினால் மன உறுதியை இழந்து, விட்டுக்கொடுத்து உடைந்து விடும் கடைசி விநாடி நேரம் ஒன்று உண்டு. வதைப்பவன் அந்த விநாடி நேரத்துக்காகவே காத்து நிற்பான். உங்கள் சந்தேக எண்ணங்கள் மேல் வெற்றி கொண்டு, முழுவதும் சிந்திக்கக் கூடிய மனநிலையில் உங்களை வைத்துக் கொள்ளுங்கள். அடியும் வலியும் தாளாமல் சபைகளைக் குறித்தோ, நீங்கள் தெரிந்து வைத்திருக்கும் அதின் நடவடிக்கைகள் குறித்தோ விபரம் சொல்லவோ, எழுதிக் கொடுத்து விடவோ நீங்கள் உங்களுக்குள்ளே ஆயத்தமாகிவிடும் ஒரு கடைசிக் கட்டத்தை எப்போதும் உங்களுக்குள் நீங்கள் உணருவீர்கள். மற்ற எதுவும் ஒன்றுமே இல்லை என்று நீங்கள் நினைக்கும் அளவுக்கு அணுஅணுவாய் சித்ரவதை செய்யப்பட்டிருப்பீர்கள்.*

*6:2 அந்த விநாடி நேரத்தின் வலியிலே கிறிஸ்து உங்களோடு இருக்கிறார் :*

*எனக்கு வலிக்கவே கூடாது என்று நினைப்பது இயலாத ஒன்று. மேற்சொன்ன அந்தக் கடைசி நொடி நேரத்தில், கர்த்தர் இந்த விநாடியிலும் என்னோடு இருக்கிறார் என்பதை உங்களுக்குள் அசையாத நினைவாய் நீங்கள் வைத்திருக்கும் போது, அந்தக் கடைசி விநாடியையும் கூட தாண்டி விடுவீர்கள். உங்களுக்குள்ளே சொல்ல முடியாத ஒரு மகிழ்ச்சியோடு ! அப்படி ஒரு இக்கட்டான கட்டத்திலும் கிறிஸ்து உங்களோடிருப்பதை உணருவீர்கள். உங்களது அந்த உடையும் நேரத்திலும் உங்களை அவர்கள் என்ன செய்தாலும், உங்களிடமிருந்து தோண்டியெடுக்க எந்தவொரு உபயோகமான விபரமும் தங்களுக்குக் கிடைக்கப்போவதில்லை என்ற நிலை அவர்களுக்கு வரும் போது, இனிமேல் அடித்து உதைப்பதால் அந்த பயனுமில்லை என்ற முடிவுக்கு அவர்கள் தானாகவே வந்து அதைக் கைவிட்டு விடுவார்கள்.*

**6:3 உங்கள் பிள்ளைகளுக்கு இரத்த சாட்சிகளின் வரலாறுகள் பற்றின புத்தகங்களை வாசித்துக்காட்டுங்கள்:**

'Foxe's Book of martyrs, மற்றும் 'Jesus Freaks' போன்ற புத்தகங்களை வாசித்துக் காட்டுங்கள். நெருக்கத்தின் நேரங்களை இரத்த சாட்சிகள் எப்படி மேற்கொண்டார்கள் என்பதை அவர்களுக்கு விளக்கிக் காட்டுங்கள்.

**6:4 அந்தந்த நேரம் அவ்வப்போது உள்ள வலியையும் வேதனையையும் தாங்கிக்கொள்ளப் போதுமானதாக இருக்கும் :**

நாளையோ, வரும் நாளிலோ வாங்கப்போகும் அடியையும் அவஸ்தையையும் இப்பொழுது இந்த நிமிடமே மொத்தமாய் நீங்கள் அனுபவிக்கப்போவதில்லை. 'அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்' என்பது போல, 'ஐயோ நாளைக்கும் இந்த வலியைத் தாங்க வேண்டுமே!' என்று இப்போதிருந்தே கவலைப்படத் தொடங்கி விடாதிருங்கள். என்ன தான் சொல்ல முடியாத பாடாய் இருந்தாலும் ஒரு மணி நேர வலியைத் தாங்கக்கூடிய சக்தி இயற்கையாகவே மனிதனுக்கு உண்டு. இப்பொழுது உள்ள ஒரு நிமிட வலிக்கு மேலான வலியை நீங்கள் தாங்க வேண்டியதில்லை. அந்தந்த நேரங்களில் உங்களுக்குக் கிருபையும் பெலனும் தானாகவே கிடைத்துக்கொண்டே இருக்கும்.

**6:5 இன்றைய வலியின் நேரம் இன்றைக்காக மாத்திரமே! :**

கடந்த நாட்களின் அடியையும் சித்ரவதையையும் நினைக்கும்போதே வலி பெரிதாகத் தோன்றும். ஆனால் 'நாளைய தினம் தன்னுடையவைக ளுக்காகக் கவலைப்படும்' என்ற நமது ஆண்டவரின் வார்த்தைகளின்படி நாளைக்குக் கதை நாளைக்கு. நாளைக்கு நாம் இருப்போமோ, நம்மை வதைப்பவன் இருப்பானோ யாருக்குத் தெரியும்?

**6:6 கசையடிபட்டு, பரியாசம் பண்ணப்பட்டு முகத்தில் துப்பப்பட்ட கிறிஸ்துவோடு இணைந்த நமது சரீரம் :**

2000 வருடங்களாக சாட்டையால் அடிபட்டுக் கிடக்கும் ஒரு சரீரத்தோடு தாங்களும் இணைக்கப்பட்டவர்கள் என்று ஒவ்வொரு அந்தரங்க சபையில் உள்ளவர்களும் அதனோடு சம்பந்தப்பட்டவர்களும் நன்றாகவே அறிந்து வைத்திருக்கிறார்கள். நாம் மனந்திரும்பிய நாள் முதலே, நாம் ஒரு வாரினால் அடிக்கப்பட்ட, பரியாசம் பண்ணப்பட்ட, துப்பப்பட்ட, முள்முடி சூட்டப்பட்ட, கைகளிலும் கால்களிலும் ஆணிகள் அடிக்கப்பட்ட ஒரு சரீரத்தின் அங்கமாகிவிட்டோம் என்பதை உணர்ந்தே நாம் அதில் அங்கமாகியிருக்கிறோம். இயேசு கிறிஸ்து தமது சரீரத்தில் பட்ட பாடுகளை நான் எனக்குள் உண்மையாய் உணர வேண்டும்.

## 7. அன்பே தலையான ஒன்று:

***7:1 உங்கள் குடும்பத்தைக் காட்டிலும் கிறிஸ்துவை மேலாக நேசிப்பது:***

*‘ஒருவன் தன் தாயையாகிலும் தகப்பனையாகிலும் வெறுக்காவிட்டால்’ போன்ற மிகக் கடுமையான வார்த்தைகளை வேதம் நமக்குக் கற்பிக்கிறது. சுதந்திர நாடுகளில் இது போன்ற வார்த்தைகள் பெரிதாய் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. கிறிஸ்துவைப்பற்றிப் போதிக்கப்பட்டார்கள் என்னும் ஒரே காரணத்தினால் ஆயிரக்கணக்கான பிள்ளைகள் தங்கள் பெற்றோரிடமிருந்து வலுக்கட்டாயமாய்ப் பிரித்துக்கொண்டு போகப்பட்டனர். நீங்கள் உங்கள் பிள்ளைகளை விட கிறிஸ்துவை நேசித்தாக வேண்டும். ‘நீங்கள் கிறிஸ்தவை மறுதலித்தாலொழிய உங்கள் பிள்ளைகளை நீங்கள் ஒருக்காலும் மீண்டும் பார்க்கப்போவதே இல்லை’ என்று கோர்ட் உங்களுக்கு விரோதமாய்த் தீர்ப்பளிக்கும். உங்கள் இருதயம் நொறுங்கிப்போகும். ஆனாலும் உங்கள் பதில், ‘நான் தேவனையே நேசிக்கிறேன்..’ என்பதாகவே இருக்க வேண்டும்.*

***7:2 உங்கள் பிள்ளைகள் உங்கள் உண்மையான விசுவாசத்தைத் தங்கள் கண்களால் கண்டு தங்கள் விசுவாசத்தைக் காத்துக்கொள்வர்:***

*தன் வீட்டிலிருந்து பாடிக்கொண்டே தனது 4 வருட சிறைத் தண்டனைக்குக் கடந்து சென்றார் நாடியா ஸ்லோபோடா. ‘எங்களைப் பற்றிக் கவலைப்படாதீங்க அம்மா, அவங்க எங்களை எங்க போட்டாலும் எங்கள் விசுவாசத்தை விட்டுவிடமாட்டோம்’ என்று, பாடிக்கொண்டே விடைபெற்ற தங்கள் தாயைப் பார்த்துச் சொன்னார்கள் அந்தப் பிள்ளைகள். அப்படியே தங்கள் விசுவாசத்தைக் காத்துக்கொள்ளவும் செய்தனர்.*

***7:3 ஒன்று இயேசுவுக்காக மரிக்க வேண்டும் அல்லது காட்டிக் கொடுக்கும் ஒரு துரோகியாய் மாறியாக வேண்டும்:***

*இயேசுவுக்காக மரித்தல் அல்லது காட்டிக்கொடுப்பவர்களாக மாறுதல் இந்த இரண்டில் ஒன்றை நீங்கள் தெரிந்துகொண்டாக வேண்டிய கட்டாயத்துக்குள்ளாக்கப்படுவீர்கள். உங்கள் முகத்தை நீங்களே கண்ணாடியில் காணும்போது, ‘நீ ஒரு துரோகி!’ என்று உங்கள் முகமே உங்களுக்கு விரோதமாய் சாட்சியிட்டு நிற்கும் போது, அந்த வெட்கம் தோய்ந்த முகத்தோடு வாழும் வாழ்வினால் என்ன லாபமுண்டு?*

## 8. மௌனமாய் வாய் திறவாமலிருக்கக் கற்றுக்கொள்ளுங்கள்:

### *8:1 நீங்கள் பேசுவதையும் சொல்வதையும் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள்.*

பெரும்பாலான தலைவர்கள் பேசுபவர்களாகவே இருப்பார்கள். ஆனால் நன்கு கவனிக்காத, காது கொடுக்காத ஒருவரால் நன்கு பேசவும் இயலாது. தங்கள் உள்ளத்தில் மிகுந்த பாரத்தைச் சுமந்து திரிபவர்கள் அநேகர். ஆனால் வெகு சிலரே உற்றுக் கவனிக்கும் பொறுமையுள்ளவர்கள். ஆகவே நீங்கள் பேசுவதைக் குறித்துக் கவனமாயிருங்கள். ஏனென்றால் நீங்கள் முன்பின் யோசிக்காமல் பேசினால் ஒரு வார்த்தை கூட சிலரை சிறையில் சிக்க வைக்கலாம், அல்லது உங்களது அந்த வார்த்தையால் அவர் கொல்லவும் படலாம்.

### *8:2 அவர்கள் உங்களைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருமுன்னேயே மௌனமாயிருக்கப் பழகிக்கொள்ளுங்கள்:*

உங்கள் தேசம் அவர்கள் கையில் விழும் முன்பாகவே நலமானதையும் பேசாமல் நீங்கள் மௌனம் சாதிக்கும் கலை ஒன்றைக் கற்றுக்கொண்டே ஆக வேண்டும். நோபல் பரிசு வென்ற ஸோல்ஸெட்ஸியின் முன்னாள் மனைவி அவரைப் படுத்திய சித்ரவதை சொல்லி முடியாது. அவர், தான் அறிந்திருந்த காரியங்கள் எல்லாவற்றையும் அவளுக்கு வெளிப்படுத்த, அவரது காரியதரிசியையும் அவள் சித்ரவதைப் படுத்தினாள். கடைசியாக உபத்திரவம் தாளாமல் அந்தக் காரியதரிசி தன் வாழ்க்கையையே முடித்துக்கொண்டாள்.

### *8:3 எளிமையான சிறிய ஜெபம் ஒன்றே போதுமானது:*

உங்களை போதை மருந்தின் மயக்கத்தில் வைத்திருக்கும்போதோ, அடி மேல் அடியாய் அடிக்கும் போதோ, உங்கள் இறையியலிலிருந்து உங்களுக்கு தெரிந்த எல்லாவற்றையும், ஏன், ஜெபத்தையும் கூட மறந்து போவீர்கள். ஆவியானவர் எல்லாவற்றையும் உங்களுக்கு நினைவூட்டித் தரும்படி கூட நீங்கள் ஜெபிக்கலாம். ஆனால் அப்படிப்பட்ட நேரங்களில் நீங்கள் ஜெபிக்கக் கூடிய ஒரே ஜெபம், 'இயேசுவே நான் உம்மை நேசிக்கிறேன்' என்பதாக மட்டுமே இருக்கட்டும். அதைக் கூடச் சொல்ல பெலனற்ற நேரங்களில் அவரை நேசிக்கும் உங்கள் இதயத்தின் ஒவ்வொரு துடிப்புமே மேலான ஒரு ஜெபமாக மேலெழுந்து செல்லும்.

*8:4 உங்களால் பேச முடியாத ஒரு நிலையிலிருந்து நீங்கள் பேச ஆரம்பிக்கும் நிலைக்குத் திரும்பும்போது, உங்கள் பேச்சினால் ஒரு லாபமும் இல்லை என்பதைக் கண்டுகொள்வீர்கள். அப்போதும் நீங்கள் என்ன பேசுகிறீர்கள் என்பதைத் குறித்து கவனமாயிருங்கள். கடினமான காலகட்டத்தில் வாயை இறுக்க மூடிக்கொள்ளும் மௌனவிரதக் கலையை இப்போதிருந்தே கற்றுக்கொள்ளுங்கள். அப்படிப்பட்ட கடுமையான நேரங்களில் வாயை இறுக மூடிக்கொள்ளுங்கள். அதைப் பிறகு அல்ல, இப்பொழுதே கற்றுக்கொள்ளுங்கள்.*

***8:5 இரகசியத்தை உங்கள் மட்டாக வைத்துக்கொள்ளுங்கள்:***

*ஒரு வாலிபன் இன்னொரு பெண்ணுக்காகத் தன் முந்திய காதலியைக் கைகழுவி விட்டான். அவர்கள் இருவரும் ஒன்றாயிருந்த நாட்களில் பல இரகசியங்களை அவன் அவளுக்குச் சொல்லியிருந்தான். பிறகு அவள் அவற்றை இரகசிய போலீசுக்குச் சொல்லித் துப்புக்கொடுக்க, அவன் கைது செய்யப்பட்டு, ஆயுள் தண்டனை பெற்று, சிறையில் பைத்தியமாகவே போய் விட்டான்.*

## 9. அனுமதிக்கப்பட்ட வழிமுறைகள்:

***9:1 அவர்கள் எப்படிப்பட்டவைகளைக் கேட்க விரும்புகிறார்களோ அதையே சொல்லுங்கள்:***

*எதை எப்படிச் செய்ய வேண்டுமென்கிற வழிமுறைகள் அறியாமல் நீங்கள் அந்தரங்க சபைகளின் வேலைகளை இரகசியமாய் செய்யவே முடியாது. எடுத்துக்காட்டாக, யாரோ ஒருவர் இப்படிப்பட்ட இரகசிய சபைகளுக்கு வேலை செய்கிறார் என்று அவர்கள் சந்தேகப்பட்டு, 'நீங்கள் இன்னும் கூட்டங்களில் கூடுகிறீர்களா?' என்று வழிமறிக்கப்பட்டு விசாரிக்கப்பட்டால், 'சார், ஜெபக்கூட்டங்களெல்லாம் தடை செய்யப்பட்டுள்ளதே?' என்று சொல்ல வேண்டும். 'பரவாயில்லையே? உனக்குத் தெரிந்திருக்கிறதே! நல்லது..' என்று சொல்வான். நீங்கள் ஏற்கனவே தலைமறைவாய் கூட்டங்களில் பங்கு பெற்றுக் கொண்டிருந் தாலும் உங்கள் பதில் இப்படிப்பட்டவைகளாய்த் தான் இருக்க வேண்டும்.*

## *9:2 பாம்பைப் போல வினாவுள்ளவர்களாய் இருங்கள்:*

*நாம் சர்ப்பத்தைப் போல வினாவுள்ளவர்களாகவும், புறாவைப் போல கபடற்றவர்களாகவும் இருக்க வேண்டும். 'நீ ஒரு கிறிஸ்தவனாய் இருப்பதால் நீ எங்களிடம் உண்மையைச் சொல்ல வேண்டும்' என்று உங்களை வற்புறுத்துவார்கள். இயேசுவும் கூட சில இடங்களில் உண்மையை மறைத்தே பேசினார். மோசேயைப் போன்ற ஆண் பிள்ளைகளைத் தப்புவிக்கும்படியாக எபிரேய தாதிகள் பார்வோனிடம் உண்மையை மறைக்கவே செய்தனர். இப்படிப்பட்ட நேரங்களில் இப்படிச் செய்வதில் தவறில்லை.*

## *9:3 நமது மரணம் எப்போது வேண்டுமானாலும் இருக்கலாம் என்பதால் யாரைப் பற்றிய விபரங்களையும் ஒரு போதும் சொல்லிவிடாதிருங்கள்:*

*கிறிஸ்துவுக்குள்ளான சகோதரர்களை எந்தச் சூழ்நிலையிலும் காட்டிக் கொடுத்து விடாதிருங்கள் அல்லது அவர்களைப் பற்றிய விபரங்களைக் கக்கிவிடாதிருங்கள். சித்ரவதையின் உச்சக்கட்டத்தில் உங்களுக்கு மரணம் ஏற்படுவது ஒன்று தான் கொடுமையானது. ஆனால் மரணம் என்பது உலகத்தில் நிகழும் இயற்கையானது. ஆகவே எப்படியிருந்தாலும் மரணம் என்ற ஒன்று இன்றோ நாளையோ சகஜம் தானே என்ற எண்ணத்தோடு, எப்படியிருந்தாலும் என்றோ ஒரு நாள் சாகத்தானே வேண்டும், அப்படிச் சாகுமுன் என் சகோதரரைக் காட்டிக் கொடுத்த பழியோடும், குத்திக் கிழிக்கும்  குற்ற மனசாட்சியோடும் ஏன் சாக வேண்டும் என்ற எண்ணத்தை எப்போதும் மனதில் பதித்து வைத்துக்கொள்ளுங்கள்.*

## 10. மூளைச்சலவைக்கு எதிர்த்து நில்லுங்கள்:

உடல் ரீதியான உபத்திரவம் ஒன்றே மிகப்பெரிய ஒன்று அல்ல - அதைவிடப் பெரியது மூளைச்சலவை. எங்கள் ருமேனிய சிறைச்சாலையிலே இங்கே அங்கே சாய முடியாத பெஞ்ச் ஒன்றில் நாள் ஒன்றுக்கு 17 மணி நேரம் கண்ணிமைக்காமல் உட்கார வைக்கப்பட்டோம். அந்தப் பதினேழு மணிநேரமும் எங்கள் காதுகளில் ஒரே ஒரு சத்தத்தை மட்டுமே நாங்கள் திரும்பத் திரும்பக் கேட்க வேண்டியதாயிருக்கும். 'கம்யூனிஸம் நல்லது, கம்யூனிசம் நல்லது...கிறிஸ்தவம் செத்தது..கிறிஸ்தவம் செத்தது..'

ஒரு நிமிடத்தில் அது உங்களுக்குப் போரடித்துவிடும். ஆனால் இதே சத்தத்தையே நீங்கள் மணிக்கணக்காக, நாட்கணக்காக, வாரக்கணக்காக, மாதக்கணக்காக, வருடக்கணக்காக எவ்விதத் தடங்கலுமின்றி இடைவிடாமல் கேட்டுக்கொண்டேயிருக்க வேண்டும். உடல் வதையை விட மிகக் கொடுமையான இந்த டார்ச்சரைத் தாங்குவது அவ்வளவு எளிதல்ல என்று என்னால் அடித்துச் சொல்ல முடியும்.

## 11. இதயச் சலவை :

கம்யூனிஸ்ட்டுகள் கண்டுபிடித்த மூளைச்சலவைக்கு எதிராக கிறிஸ்து நமக்குச் சொல்லித்தந்தது, இதயச்சலவை. ''இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்' என்றார் இயேசு. 'கிறிஸ்தவம் செத்தது, கிறிஸ்தவம் செத்தது..' என்று கம்யூனிஸ்ட்டுகள் இடைவிடாமல் ஓதிக்கொண்டிருக்க, நாங்களும் அதே பல்லவியில் 'கிறிஸ்து மரித்தார், ஆனாலும் அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார்..' என்று அதற்கு மாற்றாகவும் எதிராகவும் சொல்லிக் கொண்டேயிருந்தோம். எங்கள் இதயச் சலவை, இப்படியாக அவர்களது மூளைச் சலவையை மேற்கொண்டு நின்றது.

### *11:1 அவசியப்பட்டால் 'கடந்த காலத்தில்' வாழுங்கள்:*

விசுவாசித்தவளே பாக்கியவதி' என்று எலிசபெத்து மரியாளுக்குச் சொன்ன வார்த்தைகளை நினைத்துக்கொள்ளுங்கள். 'விசுவாசித்தவளே'

என்பது கடந்தகாலச் சொல். நீங்கள் உங்கள் கடந்தகால அனுபவங்களில் வாழ்ந்தால் பாக்கியவான்களாயிருப்பீர்கள். அப்படிப்பட்ட பாக்கியத்தில் வாழுங்கள். ஆத்துமாவின் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நீங்கள் நடந்து போகும்போது கடந்த கால ஞாபகங்களில் நீங்கள் வாழ்வதே ஒரு ஆசீர்வாதமான அனுபவமாயிருக்கும். மூளைச்சலவையை எதிர்க்க உங்களுக்குக் கைகொடுத்து நிற்பது உங்கள் விசுவாசத்தின் அசையா உறுதியும் சீஷர்களைப் போன்ற ஆழமான அன்புமே! எந்த எல்லை வரைக்கும் அதற்கு எதிர்த்து நின்றுவிடுங்கள்.

## 12. தனிமையை மேற்கொள்ளுதல் :

### *12:1 தனிமையின் வெறுமையை எப்படி மேற்கொள்வது என்பதைக் கற்றுக்கொள்ளுங்கள்:*

தன்னுடைய தனிமையின் வெறுமையை எப்படி மேற்கொள்வது என்பதே தனிமைச் சிறையில் தள்ளப்பட்ட ஒருவனின் மிகப்பெரிய பிரச்சனைகளில் ஒன்று. அந்த நாட்களில் எங்களுக்கு எந்தப் புத்தகங்களோ, வேதாகமமோ, ஒரு பென்சிலோ, ஒரு துண்டு பேப்பரோ கூட எங்கள் கையில் இருந்தில்லை. எவ்வித சத்தமோ, உங்கள் கவனத்தை ஈர்க்கும் எதுவொன்றும் கேட்கப்படாத நிசப்தமான இடமாயிருக்கும் அது. இரவு பகலாய் அந்தச் சுவர்களையே வெறித்துப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருக்க வேண்டும். இப்பொழுதே சிறை அனுபவங்களைக் குறித்த புத்தகங்களைப் படித்துப் படித்து உங்களை நீங்களே ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள்.

### *12:2 இரவில் தூங்காதிருங்கள்:*

பைத்தியமாகிப் போவதிலிருந்து என்னை நானே இப்படித்தான் காத்துக்கொண்டேன். ஆனாலும் ஆவிக்குரிய பயிற்சி முறை நிறைந்த வாழ்க்கை ஒன்றினால் உங்களை நீங்களே ஆயத்தப்படுத்திக்கொள்வது மிக மிக அவசியம். இரவெல்லாம் விழித்திருக்கும், விழித்து ஜெபித்திருக்கும் பழக்கம் ஒன்றை சிறை செல்லும் முன்பாகவே நாங்கள் உண்டாக்கிக்கொண்டோம். மிகப்பெரிய பாவங்களும் குற்றங்களும் இரவிலேயே செய்யப்படுகின்றன.

அந்தகாரத்தின் சக்திகளும் அசுத்த ஆவிகளின் தாக்கங்களும் இரவிலேயே மும்முரமாய்க் கிரியை செய்கின்றன. ஆகவே இரவு முழுவதும் விழித்திருக்கும் வழக்கத்தை வழக்கமாக்கிக்கொண்டோம்.

*12:2* - எங்கள் இரவு ஜெப வேளைகளில் முழு உலகத்துக்காகவும் ஜெபித்தோம். முழு இரவையும் ஆவிக்குரிய நிகழ்ச்சிகளால் நிறைத்திருந்தோம். ஒவ்வொரு தேசத்துக்காகவும், நகரத்துக்காகவும், தேவ மனிதர்கள், கடல் யாத்திரையில் உள்ளவர்கள், ஆகாய விமானின் மற்றும் சிறைச்சாலையில் உள்ளவர்கள் என்று எங்கள் பட்டியல் நீண்டு கொண்டே செல்லும். ஜெபம் முடிய இரண்டு மணி நேரமாகும். இப்படி ஜெபித்த பின், நான் என் ஞாபகத்திலிருந்து வேதத்தின் ஒரு பகுதியை, நேரில் வாசிப்பது போலவே வாசிப்பேன். இரகசிய சபையில் இருப்பவர்களும், அங்கு ஊழியம் செய்பவர்களும் வேதத்தை மனப்பாடம் செய்து வைத்திருப்பது மிக மிக அவசியம். இவர்கள் அல்லாது மற்றவர்களும் கூட இப்படிப்பட்ட நாட்களுக்கென்று அப்படியே தங்களைப் பயிற்சித்துக்கொள்வது அவசியம். இப்படி நான் என் ஞாபகத்திலிருந்து வேத பகுதியை வாசித்து முடித்தபின் என்னுடைய செய்தி, 'அன்பின் சகோதரரே..என்று ஆரம்பித்து .. ஆமென்' என்று முடியும். இப்படியே நாங்கள் பழகியிருந்ததால் அதுவே தனிமைச் சிறையில் எனக்குக் கைகொடுத்தது. இப்படியாக நான் கொடுத்த 350 செய்திகளை நான் மனப்பாடமும் செய்து வைத்திருந்தேன். இப்படி சில பிரசங்கங்களை தனிமைச் சிறையில் நான் தேவனுக்கும் தேவதூதர்களுக்கும் முன்பாகக் கூடச் செய்ததுண்டு.

***12:3 பயிற்றுவிக்கப்பட்ட சிந்தையோடு எப்போதும் விழிப்போடிருங்கள்:***

சிந்தனையில் சோர்வுக்கு மட்டும் இடம்கொடுத்துவிடாதிருங்கள். இடம்கொடுத்துவிட்டால் அப்புறம் நீங்கள் நீங்கள் சத்துருவின் கையில் தான் என்பதை மறந்து விட வேண்டாம். உங்கள் சிந்தை தொடர்ச்சியாய்ப் பயிற்றுவிக்கப்பட்டுக் கொண்டேயிருக்க வேண்டும். உங்கள் சக்திக்கு ஏற்றபடி வித்தியாசமான நேர்மறையான காரியங்களால் உங்கள் சிந்தனை ஆவிக்குரிய விதத்திலும் கண்ணோட்டத்திலும் ஆவியானவரின் நடத்துதலுக்கு ஏற்ப விழிப்போடு பயிற்றுவிக்கப்பட்டுக் கொண்டே இருத்தல் வேண்டும்.

## 13. உண்மையான அடையாளம்:

*அந்தரங்க சபை என்பது புதிதான ஒன்று அல்ல. அங்கே நீங்கள் புதிய ஏற்பாட்டைப் புதிய கண்ணோட்டத்தோடு காண்பீர்கள். உலகமும் அதின் வழிகளும் அல்ல, இது தான் விசுவாசிகளாகிய நமது உண்மையான அடையாளம். அரசாங்கம் நல்லதும் கெட்டதும் செய்யும். ஆனால் நாமோ எல்லாவற்றிலும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்தே ஆக வேண்டும்.*

## 14. போதகர் ரிச்சர்ட் உம்பிராண்டின் மேற்கண்ட இந்தச் செய்தியைக் குறித்து போதகர் மார்க் ஒயிட் சொல்கிறார்..

### *14:1 காலத்துக்கு முன்பாகவே ஆயத்தப்படுங்கள்:*

*அந்தரங்க சபைக்கென்று நாமும் ஆயத்தப்பட்டு, மற்றவர்களையும் ஆயத்தப்படுத்துவது என்பது இக்கட்டான காலத்துக்கு முன்பாகவே செய்யப்பட வேண்டியது என்பதை சகோ. ரிச்சர்ட் உம்பிராண்டு இந்தச் செய்தியில் மிகத்தெளிவாகச் சொல்லியிருக்கிறார். கூரையைப் பழுதுபார்ப்பது என்பது மழைக்கு முன்பாகவே செய்ய வேண்டிய காரியம். அது இந்தக் காலம் தான். ஆகவே காலம் தாழ்த்தாதிருங்கள்.*

### *14:2 வேதத்தை நீங்கள் வாசிப்பது அல்ல, நீங்களே வேத புத்தகமாக இருக்க வேண்டும்:*

*வேதத்தை வாசிப்பது மட்டும் போதாது. இருப்பவராகவே இருக்கும் தேவனோடு நீங்கள் நடக்க வேண்டும். வேதத்தின் பகுதிகளே உங்கள் மனதின், ஞாபகத்தின் மிகப்பெரிய ஒரு பகுதியாய் மாறுமளவுக்கு அவைகளின் பெரிய பெரிய பகுதிகளை நீங்கள் மனப்பாடம் செய்துகொண்டே இருக்க வேண்டும். வேதம் தேவனல்ல, ஆனால் அது தேவனின் இருதயத்தையும் அவரது கட்டளைகளையும் வெளிப்படுத்துகிறது. வேதத்தை வாசிக்கும்போதே எந்தெந்த வசனம், எந்தெந்தப் பகுதி, எந்தப் பக்கத்தில், இடது பக்கமோ வலது பக்கமோ, கீழேயோ மேலேயோ நடுவிலோ எங்கே இருக்கிறது என்பதை மனதில் படம்பிடித்து வைத்து படித்துக் கொண்டே போங்கள். எடுத்துக்காட்டாக, 'பரலோகத்தில் உங்களுக்குப் பொக்கிஷங்களை சேர்த்து வையுங்கள்' என்ற மத்தேயு 6ம் அதிகாரத்தின் பகுதி, என் ஆங்கில வேதாகமத்தில் வலது புறத்தின் மேல் பகுதியில் தொடங்கி கீழே 34ம் வசனம் வரை முடிகிறது என்பதை என் கண்களுக்கு முன்னே நான் வைத்திருக்கிறேன். அந்த வசனத்தை யோசிக்கும்போதே ஆவியானவரின் உதவியால் என்னால் அதை நினைவுகூர முடிகிறது.*

***14:3 நமக்கு முன் இந்தப் பாதையில் கடந்து சென்ற நம் சகோதரர்களின் வளமையான வரலாறுகள்:***

*நமக்கு முன்பாக இந்தப் பாதையில் கடந்து சென்ற நமது சக உதிரங்களின் ஆழமும் அகலமுமான அனுபவங்களின் வரலாறுகளால் நாம் உண்மையிலே ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம். இப்படிப்பட்ட சரித்திரங்களுக்காய்க் கர்த்தருக்கு நன்றி செலுத்துங்கள்.*

***14:4 ஒரு மேன்மையான உயிர்த்தெழுதல் :***

*தங்கள் விசுவாசத்துக்காகக் கொல்லப்பட்ட பரிசுத்தவான்களைப் பற்றி எபிரேயரின் புத்தகம் சொல்லும்போது, 'அவர்கள் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படி..' (எபி 11:35) என்று சொல்கிறது. இது அவர்களது வெகுமதியின் ஒரு பகுதியோ? வெளிப்படுத்தல் 6ல் இரத்தசாட்சியாய்க் கொல்லப்பட்ட ஆத்துமாக்களின் கூக்குரல் தேவனின் பலிபீடத்தின் கீழிருந்து கூப்பிடுகிறது என்று சொல்லப்படுகிறது. நமது நித்தியத்தின் நாட்களை இப்படிப்பட்ட ஸ்தலத்தில் செலவிடுவது என்பது எத்தனை பெரிய காரியம்! நாமும் ஒரு வேளை அந்த எண்ணிக்கையை நிறைவு செய்யும் சிலரில் ஒருவராய் இருக்கலாம். ஆகவே எல்லாக் காரியத்திலும் தேவன் ஒருவரையே நாம் பிரியப்படுத்துவோமாக! (கொலோ 1:10)*

Chapter 2

# சபைக்கு வருகிறது ஒரு எமர்ஜென்ஸி !

## (அடைபட்ட அக்கினி)

*'ஓ ! உலகம் எங்குமுள்ள நமது சபைகளிலெல்லாம் ஒரு மாதம் முழுவதும் பிரசங்கங்கள் நிறுத்தப்பட்டு, தேச எழுப்புதலுக்காக அங்கலாய்க்க உத்தரவு பிறப்பிக்கும் ஒரு புரோட்டஸ்ட்டாண்டு போப்பாண்டவர் நமக்கு இல்லையே !' என்று, எழுப்புதலுக்கான ஒரு எமர்ஜென்ஸி வராதோ என்று அங்கலாய்த்தார் லியோனார்ட் ரேவன்ஹில்... !*

*அவர் ஏங்கிய எழுப்புதல் வந்தே தீரும் !*

*ஆனால் அந்த எழுப்புதலுக்கு முன்னால், வரும் உபத்திரவக்காலக் கட்டத்துக்கு முன்னாகவே, சபை தன்னைத்தானே ஒரு ஆவிக்குரிய எமர்ஜென்ஸிக்கு உட்படுத்திக் கொண்டு மிகத்தீவிரமாய் அந்த நாட்களுக்கு ஆயத்தப்படுவதாக !*

## Practical Tips For The Emergency Of The Church Today

- *உபத்திரவக் காலம் ஒன்று சபைக்கு வந்தே தீரப்போகிறது என்று நீங்கள் முதலில் உங்களில் ஏற்றுக் கொண்டு, உங்கள் சபைகளை எச்சரியுங்கள் !*

- *திட்டவட்டமான நாட்டு நடப்புகளையும் சபையின் நிலைமையையும் குறித்த வாட்ஸப் செய்திகளை ஜெபத்துக்காகக் கிறிஸ்தவ ஆவிக்குரிய குழுக்களுக்கு ஃபார்வேர்டு செய்து எச்சரியுங்கள் !*

- *பல வருட விசுவாசிகளும் கூட அறிந்திராத அப்போஸ்தல இரத்தசாட்சி வரலாறுகளையும் செய்திகளையும் சபையில் பகிர்ந்து கொண்டு விசுவாசிகளை ஸ்திரப்படுத்துங்கள் !*

◆ ஹெரலன் பாப்போவ், ரிச்சர்ட் உம்பிராண்ட் போன்ற தேவ மனிதர்களின் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகங்களைப் படியுங்கள்..மற்றவர்களையும் படிக்கச் செய்யுங்கள் !

◆ ஜெபிக்கும் ஆவிக்குரிய எமர்ஜென்ஸி குழுக்களை உருவாக்கி இப்போதிருந்தே வரப்போகும் நாட்களுக்காக ஜெபிக்க ஆரம்பித்து விடுங்கள் !

◆ ஆங்காங்கே அவசரக்கட்ட ஜெபக்குழுக்கள், இரவு விழிப்புகள், பகல் இரவு சந்தியா ஜெபங்கள், வரப்போகும் நாட்களை முன்குறித்தே ஆரம்பிக்கப்படட்டும் !

◆ பைபிள்களும் புதிய ஏற்பாடுகளும், கைப்பிரதிகளும் பெட்டி பெட்டியாய், கட்டுக்கட்டாய் தெருக்களில் எறியப்பட்டு, கூட்டி எரிக்கப்படும் நாட்கள் வரப்போகிறபடியால், முதலாவது, வசனங்களைப் படித்துப் படித்து எவ்வளவு வசனங்களை மனப்பாடம் செய்து வைத்துக் கொள்ள முடியுமோ மனப்பாடம் செய்து வைத்துக் கொள்ளுங்கள் !

ஒரு நாளுக்கு 20 அதிகாரங்கள் படித்தால் இரண்டு மாதங்களில் முழு பைபிளையும் படித்து முடித்து விடலாம்..இந்த வேகத்தில் போனால், நீங்கள் பல முறை வேதத்தைத் துரிதமாகப் படித்து முடித்துவிட வாய்ப்பு உண்டு !

◆ அந்த நாட்களில் உங்கள் மொபைலோ, லேப்டாப்போ கம்ப்யூட்டரோ ஒன்றும் உங்கள் கையில் இருக்கப்போவதில்லை. சகலமும் பிடுங்கப்பட்டுப் போகும் ! ஆகவே எறும்பினிடத்தில் போய் வேகவேகமாய் ட்ரெயினிங் எடுத்துக் கொண்டு, வார்த்தையாம் தானியத்தைச் சேர்த்து வைத்துக் கொள்ளுங்கள் !

◆ கூடுமானவரை சபையின் நெருக்கடி கால வரலாறுகளையும், இப்படிப்பட்ட காலங்களை அப்போஸ்தலர்கள் எப்படி எதிர்கொண்டார்கள் என்பதையும், நமது ஆண்டவராகிய இயேசு இப்படிப்பட்ட நாட்களைக் குறித்து என்னென்ன முன்னெச்சரித்தார் என்பதையும் மீண்டும் மீண்டும் படித்துத் தெரிந்து கொண்டு விபரங்களை சேர்த்து வைத்துக் கொள்ளுங்கள் !

◆ கூடுமானவரை முழு வேதாகமங்களையும், கிதியோன் புதிய ஏற்பாடுகளையும், கைப்பிரதிகள், புத்தகங்கள் யாவற்றையும் உங்கள் சபையில் அல்லாது, உங்கள் விசுவாசிகளின் வீடுகளிலும், மறைவிடங்களிலும், பாதுகாப்பாய் இருக்கக்கூடிய அனைத்து இடங்களிலும் மறைவாய் வைத்து விடுங்கள் ! இப்போதே இந்த வேலையைச் செய்ய ஆரம்பித்து விடுங்கள் ! நெருக்கடி காலத்தில் இது மிகவும் உதவியாய் இருக்கும் !

அடுத்த நாள் கல்மழை பெய்யப் போகிறது என்று அறிந்தவுடனே, அதினால் எச்சரிப்படைந்த கர்த்தருக்குப் பயந்த எகிப்தியர்கள், தங்கள் ஆடுமாடுகளையும் அடிமைகளையும் வீட்டிற்குள்ளே சேர்த்துக் கொண்டு பாதுகாப்பான இடத்திற்குள்ளே மறைத்து வைத்துக் கொண்டார்களாம் !

◆ உங்கள் வீடுகளில், சபைகளில் மற்றும் பைபிள் காலேஜுகளில் உள்ள லைப்ரரியில் உள்ள அருமையான கமென்ட்ரி பைபிள்கள், ஆவிக்குரிய ஆங்கில, தமிழ் புத்தகங்கள் மற்றும் VCD-DVDக்களை தயவுசெய்து பாதுகாப்பான இடங்களுக்கு உடனடியாக மாற்றி விடுங்கள் ! இலங்கைப் போரில் முதலாவது தாக்கப்பட்டு கொளுத்தப்பட்டு சாம்பலாய்ப் போனது, மிகப்பெரிய, உலகப்புகழ்பெற்ற யாழ்ப்பாண நூலகம் தான் என்பதை மறந்து விட வேண்டாம் !

வேதாகமங்களும் அரிய ஆவிக்குரிய நூல்களுமே அல்லவோ நமது விலைமதிப்பில்லா பொக்கிஷங்கள் !

◆ வீட்டுப்பத்திரங்கள், சபை கட்டிடப் பத்திரங்களை பத்திரமாய் பத்திரப்படுத்துங்கள் ! முடிந்தால் கலர் ஜெராக்ஸ் காப்பி எடுத்து முக்கியமான, நம்பகமான வெவ்வேறு நபர்களிடம் கொடுத்து வையுங்கள் ! *Soft Copy* எடுத்து விழிஸள பண்ணி வைத்துக் கொள்வது நல்லது !

◆ நேபுகாத்நேச்சார் எருசேமை முற்றுகையிட்டிருக்கும் போது, எரேமியா, ஆலயத்தின் முற்றத்திலுள்ள காவல் கிடங்கில் கட்டுண்டு கிடக்கும் போது, தான் கர்த்தருடைய வார்த்தையின்படியே தன் பெரிய தகப்பனாகிய சல்லூமின் குமாரன் அனாமெயேலின் கையிலிருந்து நிலத்தை வாங்கி, சாட்சிப் பத்திரம் எழுதி, அதற்கு முத்திரை போட்டு, அதைப் பிரதி எடுத்து அநேக நாள் இருக்கும்படி அந்தப் பத்திரத்தை ஒரு மண் பாண்டத்திலே பத்திரமாய் வைத்தானாம் ! (எரே 32: 1-14)

◆ சபையின் ரெக்கார்டுகளை வேறு இடங்களுக்கு இடம் மாற்றி பத்திரப்படுத்தி வைத்துவிடுங்கள் ! அவசியம் இல்லாதவைகளையே கண்துடைப்புக்காகக் கைவசம் வைத்திருங்கள் !

◆ பெரிய சபைகள், கூடுமானவரை தங்கள் சபைகளை சிறு குழுக்களாகப் பிரித்து, வீடுகளில் கூட்டங்கள் நடத்தும்படி குழுத்தலைவர்களை நியமித்து, அவர்களைப் பயிற்றுவித்து தைரியமாய் விசுவாசிகள் பொறுப்பில் கொடுத்து விடுங்கள் !

வரப்போகும் நாட்களில் மெகா சர்ச் செட்டப்பெல்லாம் காணாமல் போய்விடும் ! ஹவுஸ் சர்ச் தான் நிற்கும் ! பெருகும் ! புதிய ஏற்பாடும் கிறிஸ்தவ சரித்திரமும் சொல்லித் தருவது இதுவே ! இன்றும் கம்யூனிசச் சீனாவில் புற்றீசலாய்ப் பெருகி வருவது இப்படிப்பட்ட வீட்டு சபைகளே !

◆ நேரம் கிடைக்கும் போதல்ல..கட்டாயமாய் நேரத்தை ஒதுக்கி ஜெபித்து ஜெபித்து கிருபையையும் பெலனையும் அபிஷேகத்தையும் அதிகமதிகமாய் சேர்த்து வைத்துக் கொள்ளுங்கள் !

◆ ஜெபித்து ஜெபித்து தைரியத்தையும் விசுவாசத்தையும் உள்ளான நெஞ்சுரத்தையும் பெருக்கிக் கொள்ளுங்கள்

◆ ஜெபித்து ஜெபித்து காலத்துக்குத் தேவையான ஞானத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள் !

◆ ஜெபிக்க வாஞ்சித்தும், ஜெபிக்கவே முடியாத நாட்கள் வருகிறது ! இப்போதிருக்கும் சாதா பெலனும் தைரியமும் விசுவாசமும் அந்த நாட்களில் பஞ்சாய்ப் பறந்து போகும் !

◆ ஆகவே 'இப்போதே' - இந்தக் கோடைக் காலத்திலேயே எறும்பைப் போல ஆவிக்குரிய சகலவற்றையும் சேர்த்து வைத்துக் கொள்ளுங்கள் !

'ஆலயத்துக்கு வேண்டியவைகளை 'இப்போதே சேகரம் பண்ண வேண்டும்' என்று சொல்லி தன் மரணத்துக்கு முன்னே திரளாய் சவதரித்து வைத்தான் தாவீது ' என்ற வார்த்தை உங்களையும் என்னையும் முகத்தில் அறையட்டும் ! (2 நாளா 22:5)

◆ 'இப்போதே' ஜெபத்தைத் திரளாய் சேர்த்து வைத்துக் கொள்ளுங்கள் !

◆ 'இப்போதே' வேத வசனங்களைத் திரளாய் மனதில் சேர்த்து வைத்துக் கொள்ளுங்கள் !

◆ 'இப்போதே' விசுவாசத்தைத் திரளாய் சேர்த்து வைத்துக் கொள்ளுங்கள் !

◆ 'இப்போதே' உள்ளான பெலனைத் திரளாய்ப் பெருக்கி வைத்துக் கொள்ளுங்கள் !

◆ 'இப்போதே' அபிஷேகத்தையும் தைரியத்தையும் திரளாய்ப் பெருக்கி வைத்துக் கொள்ளுங்கள் !

◆ ஆசா தனக்குக் கிடைத்த இளைப்பாறுதலின் வருடங்களிலேயே தன்னையும் தன் பட்டணங்களையும் தன் சேனையையும் திடப்படுத்தி பெலப்படுத்தி வைத்துக் கொண்டானாம் ! அவன் தன்னை பெலப்படுத்திக் கொண்ட நாட்கள் முடிந்த உடனேயே வந்தான் எகிப்திய மன்னன் சேரா..பத்து இலட்சம் பேர் கொண்ட தன் படையுடன் !

◆ கூடுமானவரை உபவாசத்தில் இறங்கி தானியேலைப் போல பருப்புக்கும் காய்கறிக்கும் மாறிவிடுங்கள் ! பிறந்தது முதல் நம் வயிற்றுக்குள் டன் டன்னாய் இறங்கிய நாட்டுக்கோழிக்கும், ஆட்டு மாட்டுக்கறிக்கும், போர்க் என்ற வெள்ளைப் பன்றிக்கும், வஞ்சரத்துக்கும், எறா, நண்டுக்கும், கணவாவுக்கும் ஒரு கணக்கு தான் உண்டோ ! இப்பவாவது நிலைமை அறிஞ்சு மரக்கறிக்கு மாறிவிடுவோம் ! 'அந்த நாட்கள் நிறைவேறுமட்டும் துக்கித்துக் கொண்டிருந்த தானியேல் ருசிகரமான அப்பத்தை சாப்பிடவும் இல்லையாம்...இறைச்சியும் திராட்சரசமும் அவனது வாய்க்குள் போகவும் இல்லையாம்' ! (தானி 10:2, 3) ஜெயில்ல அவன் நம்ம கழுத்தில கத்தி வைக்கிறதுக்கு முன்னால, 'நீ போஜனப் பிரியனாய் இருந்தால், உன் தொண்டையிலே கத்தியை வை !' என்று நீதிமொழிகள் சொல்லித் தருவது போல நமக்கு நாமே இந்த சாப்பாட்டு விஷயத்தில தொண்டைல கத்தி வைத்துக்கொள்ளுவோமே ! (நீதி 23:2) என்ன கெட்டுப் போச்சி ?

◆ ஒருவேளை இதெல்லாம் பைத்தியமாய்த் தோன்றலாம்..அநேகர் நினைக்கிறபடி, அப்படியே இப்படிப்பட்ட நாட்கள் ஒன்று வராமலே போனால் கூட, இப்போதே உபவாசத்தையும் ஜெபத்தையும் ஆவிக்குரிய பெலன்களையும் அதிகரித்துக் கொள்ளுகிறதினால் நமக்கு லாபமன்றி, நஷ்டம் ஏதுமில்லையே !

◆ நம்மில் வயதானவர்களும் பெண்களும் குழந்தைகளும் இப்படிப்பட்ட காலங்களை சந்திக்கவோ, சகிக்கவோ கூடாதவர்களானதால், அவர்கள் பாதுகாப்பாய் இருக்கக்கூடிய அதற்கான இடத்தையும், அவர்களைப் பாதுகாத்துப் பராமரிக்கக் கூடிய நபர்களையும் இப்போதே யோசித்து தயார் செய்து வைத்துக் கொள்ளுங்கள் ! அவசரத்துக்குக் கைகொடுப்பார்கள் ! தாவீதை அவனது ஆபத்து நாட்களில் பராமரிக்க ஒரு பர்சிலாவை ஆயத்தப்படுத்தி வைத்திருந்த தேவன், யாரோ ஒருவரை உங்களுக்காக ஆயத்தப்படுத்தி வைத்திருப்பார் !

◆ முக்கியமான நபர்களின் மொபைல் நம்பர்களை மனப்பாடம் செய்து வைத்துக் கொள்ளுங்கள் ! உங்கள் வீட்டு சிறு பிள்ளைகளுக்குக்கூட வரப்போகும் இந்த நாட்களைக் குறித்து கொஞ்சமாவது சொல்லிக் கொடுத்து அவர்களை இப்போதே மனதளவில் ஆயத்தப்படுத்தி விடுங்கள் !

◆ இருக்கிற மூட்டை முடிச்சுக்களையும் பணமுடிப்புக்களையும் எல்லாத்தையும் கட்டிக்கொண்டு சபையையும் விசுவாசிகளையும் அம்போன்னு விட்டுட்டு பாஸ்டர்கள் புள்ளகுட்டிகளோட வெளிநாட்டுக்கு எஸ்கேப் ஆயிராதீங்க ! 'சிங்கத்துக்குத் தப்பினவனுக்கு கரடி எதிர்ப்பட்டது போலவும், அல்லது வீட்டுக்குள்ளே வந்து சுவரின் மேல் தன் கையை வைத்த போது பாம்பு அவனைக் கடித்தது போலவும்' நீங்க ஓடிப்போற இடத்திலேயும் ஏதாவது ஆகிப்போகும் ஜாக்கிரதை ! ஆமா ! (ஆமோஸ் 5:19)

'மேய்ப்பனாய் இராதவனும், ஆடுகள் தனக்கு சொந்தமல்லாதவனுமான கூலியாள், ஓநாய் வருகிறதைக் கண்டு ஆடுகளை விட்டு ஓடிப்போகிறான்..அப்பொழுது ஓநாய் ஆடுகளைப் பீறி, அவைகளை சிதறடிக்கும்.. கூலியாள் கூலிக்காக வேலை செய்கிறவனாகையால் ஓடிப்போகிறான்..ஆடுகளுக்காக அவன் கவலைப்படான்..' என்று நம் ஆண்டவர் இப்படிப்பட்வர்களைக் குறித்தே சொன்னார்.. (யோ 10:12, 13)

◆ இந்த நாட்களில் தயவுசெய்து யாரும் பெர்சனல் லோனோ, கிரெடிட் கார்டு லோனோ, அல்லது வாகனங்கள் வாங்குவதோ சபை கட்டிடங்கள் கட்டுவதோ வேண்டவே வேண்டாம். சபையையோ விசுவாசிகளையோ காணிக்கையையோ தசமபாகத்தையோ நம்பி கடன்பட்டுவிடாதீர்கள் !

◆ சபையின் மேல் வரப்போகும் எமர்ஜென்ஸி காலங்களில் எப்படி ஊழியம் செய்ய வேண்டும் என்று உங்களையே மனதளவில் ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள் ! அதற்கான பயிற்சி வகுப்புக்கள் எங்கேயாவாவது நடைபெறுகிறதென்றால், தயவுசெய்து அதில் இணைந்து உங்களையும் உங்கள் விசுவாசிகளையும் பயிற்றுவித்துக் கொள்ளுங்கள் !

இப்போது வெளிப்படையாக செய்து வரும் கைப்பிரதி ஊழியங்களையும் புதிய ஏற்பாட்டு விநியோகங்களையும் தயவுசெய்து நிறுத்தி விடுங்கள் அல்லது ஞானமாய்க் குறைத்துக் கொள்ளுங்கள். இப்படிச் சொல்லுவதால் நாம் அவர்களுக்கு பயந்துவிடுகிறோம் என்று அர்த்தமல்ல..அல்லது சமரசம் செய்து கொள்வதுமல்ல.. 'காலத்துக்கு முன்னால ஏன் சாக வேண்டும் ?' எல்லாவற்றுக்கும் ஒரு காலமுண்டு என்று வேதம் சொல்லவில்லையோ ?

நீங்களும் நானும் வெளியரங்கமாய் ஊழியம் செய்த நாட்கள் ஒன்று இருந்ததானால், இப்போது இருக்கும் நாட்கள் மறைந்து செய்பவை என்பதை மறக்க வேண்டாம் ! ஊழியம் செய்கிறவன் எங்கேயும் செய்து கொண்டே தான் இருப்பான் ! கால்களைத் தொழுவத்திலே மாட்டினாலும் அவன் அங்கே பாட்டாவது பாடிக்கொண்டிருப்பான் ! சிறையிலும் பூமியதிர்ச்சி வரும் ! சிறைச்சாலைத் தலைவனே குடும்பமாய் இரட்சிக்கப்படுவான் கவலையே படாதீங்க ! அதனால் ஞானமாய் நடந்து கொள்ளுங்கள் ! நீங்களும் அடிவாங்கி மற்றவர்களையும் ஏன் அடிவாங்க வைக்கணும் ??

◆ கம்யூனிச பல்கேரியாவில், தான் அடைக்கப்பட்டிருந்த ஜெயில் அறைகளில் மூட்டைப்பூச்சிகள் நசுக்கப்பட்டு முழுவதும் இரத்தக்கறை படிந்திருந்த சுவர்களில் எல்லாம் தைரியமூட்டும் வேத வசனங்களை எழுதிவைக்கும் பழக்கத்தை வைத்திருந்தார் ஹெரலன் பாப்போவ் !தனக்குப் பிறகு அந்த செல்களில் அடைக்கப்படும் நபர்களுக்கு அது ஆறுதல் தரட்டுமே என்ற நோக்கத்துடன் ! அப்படியே அவைகள் அநேகரைத் தேற்றியதும் உண்டாம் !

*வேறு செல்களில் அடைக்கப்பட்டிருந்த கைதிகளுக்குக் கம்பியில்லாத் தந்தி என்று அவரே பெயர் வைத்துக் கொண்ட, தகர டப்பாவை வைத்துத் தட்டித் தட்டி ஒலி எழுப்பி - morse code என்ற முறையில் சுவிசேஷம் சொல்லி, அநேகரை ஆண்டவரிடம் வழிநடத்தியதுமல்லாமல், ஒரு கட்டத்தில் சிறையின் சட்டதிட்டங்கள் சற்று தளர்த்தப்பட்ட போது, இங்கிலீஷ் க்ளாஸ் என்ற போர்வையில் பைபிள் க்ளாஸே நடத்தி, அந்த நிலையிலும் அநேகக் கைதிகளைத் திடப்படுத்தி வந்தார் அவர் !*

◆ *வெளியேயும் உள்ளேயும் காலத்துக்கும் சமயத்துக்கும் ஏற்ப சுவிசேஷம் அறிவிக்கும் புதுப்புது டெக்னிக்குகளைக் கையாளக் கற்றுக் கொள்ளுங்கள் !*

*அந்த நாட்களில் கைகொடுக்கப் போவது பெர்சனல் இவாஞ்சலிஸம் என்ற தனி ஆள் ஊழியம் தான் ! எருசலேம் சபை சிதறடிக்கப்பட்ட போது சமாரியாவுக்கு ஓடிச்சென்ற பிலிப்பு எகிப்தின் மந்திரியை இயேசுவிடம் நடத்தி அப்போதே ஞானஸ்நானம் வரை எடுத்துச் சென்றதும், பவுல் கூடாரத்தொழில் செய்யும் போது அங்கே சந்தித்த ஆக்கில்லா பிரசில்லாவை வழிநடத்தியதும், சிறையில் அடைக்கப்பட்டாலும் அங்கே அந்த இராத்திரியிலே சிறைச்சாலைத் தலைவனையும் குடும்பத்தையும் ஆண்டவருக்குள் நடத்தி, அந்த ராத்திரியிலேயே ஞானஸ்நானமும் கொடுத்த இப்பேர்ப்பட்ட ஊழியங்களுக்கு மூலகாரணமானதும் இந்த பெர்ஸனல் இவாஞ்சலிஸம் என்ற தனி ஆள் ஊழியம் தானே !*

*இயேசுவை சிலுவையில் போடுங்கள் ! அங்கேயும் அவர் ஒருவனைப் பரதீசுக்கு ஆயத்தப்படுத்தி விடுவார் என்றார் அருமை அண்ணன் R.Stanley அவர்கள் ! உண்மையிலும் உண்மை ! அது தான் பெர்சனல் இவாஞ்சலிஸம். இனிவரும் நாட்களில் பெருமளவு ஆத்துமாக்களை அள்ளித் தரப்போவதும் இந்த ஊழியமே ! பேரின்பப் பெருவிழாக்களின் நாட்களும் எழுப்புதல் திருவிழாக்களின் நாட்களின் சகாப்தமும் முடிந்து போனது !*

◆ *சபை தனக்குத் தானே இப்படி ஒரு அவசர கால எமர்ஜென்ஸியைப் பிரகடனப்படுத்திக் கொண்டு, இதைப் பற்றிய செய்திகளையே பிரசங்கிப்பதும், தங்களுக்குள்ளே ஆலோசிப்பதும், ஜெபிப்பதுமாய் இருக்கட்டும் !*

◆ போர்க்காலங்களில் தேசத்தின் ஒட்டுமொத்த கவனமும், பேச்சும், பொருளாதாரமும் அதற்கென்றே திருப்பிவிடப்பட்டு, ஒவ்வொரு வீட்டிலுள்ள குடும்பத்தலைவனும் வாலிபர்களும் இராணுவத்தில் பணிபுரிய கட்டாயப்படுத்தப்படுவது போல, சபை தன்னைக் கட்டாயமாய் இக்காரியங்களில் ஈடுபடுத்திக் கொள்ளட்டும் !

◆ எமர்ஜென்ஸி கூட்டங்கள் வீடுகளில் கூடட்டும் ! சபையின் முழுக் கவனமும் இந்நாட்களில் வரப்போகும் இப்படிப்பட்ட காலத்தைக் குறித்தே இருப்பதாக !

◆ வடக்கேயிருந்து தீங்கு தேசத்தினுடைய குடிகள் எல்லார் மேலும் வரும் !

◆ தேசத்தில் எக்காளம் ஊதுங்கள்! உரத்த சத்தமாய்க் கூப்பிடுங்கள் !

*நான் வடக்கேயிருந்து பொல்லாப்பையும், மகா சங்காரத்தையும் வரப்பண்ணுகிறேன்.. உன் தேசத்தைப் பாழாக்கி விடும்படிக்குச் சிங்கம் தன் புதரிலிருந்து எழும்பி, ஜாதிகளைச் சங்கரிக்கிறவன் தன் ஸ்தானத்திலிருந்து புறப்பட்டு வருகிறான்..*
*உன் பட்டணங்கள் குடியிராதபடி அழிக்கப்படும்..*

◆ *நாசத்தின் மேல் நாசம் வருகிறதாகக் கூறப்படுகிறது ! தேசமெல்லாம் பாழாகிறது..அசுப்பிலே என் கூடாரங்களும், ஒரு நிமிஷத்திலே என் திரைகளும் பாழாக்கப்படுகிறது ! நான் எது வரைக்கும் கொடியைக் கண்டு எக்காளத்தின் சத்தத்தைக் கேட்பேன் ! (எரேமியா 1:14 / 4: 5-7, 20, 21 )*

◆ *நீ படப்போகும் பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே ! இதோ நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாகப் பிசாசு உங்களில் சிலரைக் காவலில் போடுவான்..பத்து நாள் உபத்திரவப்படுவீர்கள் ! ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு ! அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன் ! வெளி 2:10*

Chapter 3

# உபத்திரவ காலத்தைக் குறித்த ஐந்து முக்கிய சத்தியங்கள் :

(சீன இரகசிய சபைத் தலைவர்கள் – பிரதர் யூன், ஏனோக் வாங், Zang ரோங்லியாங் மற்றும் பீட்டர் Xu எழுதியது)

*1. தேவன் சகலத்தையும் தமது ஆளுகையில் வைத்திருப்பவர். அவர் நம் மேலும் நமது சபைகளின் மேலும் உபத்திரவத்தை அனுமதிப்பாரானால் அது அவரது இராஜ்யத்தின் நன்மைக்காகவே இருக்கும். உபத்திரவத்தின் குகையையும், சித்ரவதையின் சூளையையும் கடந்து சென்ற சீன விசுவாசிகள், அந்தப் பாடுகளின்போதும் கூட இயேசுவோடு தனிப்பட்ட முறையில் சஞ்சரிக்கும் அனுபவத்தின் முழு மகிழ்ச்சியையும் தங்களுக்குள்ளே கொண்டிருந்து, அந்த அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து அதை நீரூற்றாக்கிக்கொள்ளவே செய்தனர்.*

*2. நமது மாம்சமும் சரீரமும் விரும்பவே விரும்பாத ஒன்று உபத்திரவம். ஆனால் அப்படிப்பட்ட நேரத்திலும், நம் ஆண்டவர் நம்மை விட்டு விலகவும் மாட்டார், நம்மைக் கைவிடவும் மாட்டார் என்ற சத்தியமே இயேசுவின் மேல் நாம் வைக்கும் அசையாத விசுவாசமாய் இருக்க வேண்டும். உபத்திரவம் நாம் அவரோடு வைத்திருக்கும் ஆழமான அன்பின் உறவை ஒருக்காலும் சிதைக்க முடியாது. 'கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ?' (ரோ 8:36)*

*3. இன்னொரு முக்கியமான காரியம், மிக பயங்கரமான உபத்திரவம் மற்றும் சித்ரவதைகளின் பாதையில் நாம் கடந்து செல்லும்போது, இது சாத்தானால் வந்தது என்று மட்டுமே அந்தக் கோணத்தில் பார்க்கக்கூடாது. சீனாவிலே, பின்னாட்களில் தங்கள் பாடுகளின் நாட்களை ஜனங்கள் திரும்பிப் பார்த்தபோது, தன் பிள்ளைகளின் மேல் வைத்த அன்பினிமித்தம் பாடுகளின் முழுப்பாதையையும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து*

*கண்காணித்துக்கொண்டே தான் இருந்தார் என்பதைக் கண்டு கொண்டார்கள். கோடானுகோடி அவிசுவாசிகள், மெய்யான சுவிசேஷத்தைக் காணக்கூடாதபடி தடைச்சுவராய் நின்றுகொண்டு, அநேக விசுவாசிகளைத் தன் வலையின் கட்டுக்குள் சிக்கிவைத்திருந்த செத்த கிறிஸ்தவ மதவாத அமைப்புகளை உடைத்தெறிய வைராக்கியமுடையவராயிருந்த தேவன் இந்தப் பாடுகளின் பாதையை ஒரு கருவியாகவே பயன்படுத்தினார்.*

*4. மந்தைகளின் நடுவிலிருந்த அரைகுறை மனதுடனான மாம்சீக விசுவாசிகளை நீக்கித் தமது திராட்சத்தோட்டத்தைப் பரிசுத்த ஆவியானவர் கிளை நறுக்கிக் களைபிடுங்கி சுத்தம் செய்யும் ஒரு வழிமுறையே உபத்திரவம். சீனாவிலே 1950 ன் காலங்களில் பயங்கரமான உபத்திரவமும் சித்ரவதையும் கட்டவிழ்த்துவிடப்பட்ட காலங்களில், சபைக்குச் செல்பவர்களில் மூன்றில் இரண்டு பேர் பின்மாற்றமடைந்து காணாமலே போயினர். 'வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைகிறார்கள்' (மாற் 4:17) என்று இயேசு கிறிஸ்து இப்படிப்பட்டவர்களைக் குறித்தே சரியாய்ச் சொன்னார். உபத்திரவக்காலத்தின் துவக்கத்திலேயே மூன்றில் இரண்டு பங்கு சீனக்கிறிஸ்தவர்கள் இடறலடைந்து பின்வாங்கிப் போயிருப்பார்களானால், உலகின் மற்ற பகுதிகளின் நிலை என்ன?*

*5. தங்கள் விசுவாசத்தைக் காத்துக்கொள்பவர்களுக்கோ, அநேக சந்தர்ப்பங்களில் உபத்திரவம் எழுப்புதலையே கொண்டு வருகிறது. சீனாவிலே உபத்திரவத்துக்கு முன் ஒரு மில்லியனாயிருந்த கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை, கம்யூனிசக் கொடுங்கோல் ஆட்சியின் 60 ஆண்டுகளுக்குப் பிறகு 100 மில்லியனாக அசுர வளர்ச்சி கண்டதை அறிவீர்களோ? தேவனுக்கே மகிமை உண்டாகட்டும். இந்த உண்மை சீன விசுவாசிகளுக்குத் தெரிய ஆரம்பித்தபோது, அவர்கள் உபத்திரவத்தை சகித்தது மட்டுமல்ல, அதை தேவனிடத்திலிருந்து தங்களுக்கு வந்த விசேஷித்த ஆசீர்வாதமாய் எண்ணி நெஞ்சாரத் தழுவிக் கொண்டனர்.*

# உபத்திரவ காலங்களை எதிர்பார்த்து சபையை அதற்காகப் பயிற்சியுங்கள்.

Chapter 4

▶▶▶▶ Mission Frontiers

## 1. துவக்கம் முதலே உபத்திரவத்துக்கான ஆயத்தம் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

சுவிசேஷம் அறிவிக்கும்போதே சீஷராகும் விலைக்கிரயத்தையும் சொல்லிக்கொடுக்க வேண்டும். 'இயேசு கண்ணீர் துடைப்பார், கவலைகள் மாற்றுவார், கஷ்டங்கள் தீர்ப்பார், சமாதானம் தருவார்' என்ற மலிவான சுவிசேஷம் அல்ல, 'சிலுவை சுமக்கும் சுத்த சுவிசேஷத்தையும்' சேர்த்தே அறிவிக்க வேண்டும், கற்றுக்கொடுக்க வேண்டும். சுயத்துக்கு மரித்தலையும், சுவிசேஷத்துக்காக மரித்தலையும், ஆண்டவருக்காக மரித்தலையும் ஆரம்பம் முதலே கற்பித்துப் பயிற்சியளிக்க வேண்டும்.

## 2. உபத்திரவத்தைப் பற்றிய புதிய ஏற்பாட்டு சம்பவங்களையும் கதைகளையும் வசனப்பகுதிகளையும், சரித்திரத்தின் நிகழ்வுகளையும் இரத்தசாட்சி வரலாறுகளையும் சபைக்குச் சொல்லித்தர வேண்டும்.

புதிய ஏற்பாட்டு சுவிசேஷ நூல்களையும், அப்போஸ்தல நடபடிகளையும், பவுலின் நிருபங்களையும் வாசிக்கும்போது அவைகள் உபத்திரவத்தின் சம்பவங்களை ஏகமாய்த் தங்களுக்குள் கொண்டதாய் இருப்பது நாம் அறிந்ததே!

உபத்திரவம் - வளர்ச்சி / வளர்ச்சி - உபத்திரவம் - சபை வளர வளர, உபத்திரவமும் பெருகும். உபத்திரவம் பெருகப்பெருக சபையும் வளரும். இதுவே புதிய ஏற்பாடும் சபை சரித்திரமும் நமக்குச் சொல்லித்தருவது.

இவற்றை நமது மக்களுக்குச் சொல்லிக் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். நமது ஞாயிறு பள்ளி பிள்ளைகளுக்கும், டீன் ஏஜர்ஸ்களுக்கும் புதிய ஏற்பாட்டு உபத்திரவக் காலங்கள் மற்றும் இரத்தசாட்சிகளின் வாழ்க்கை வரலாறுகளின் அடிப்படையில் குறுநாடகங்கள் நடத்தி அவர்கள் மனதை ஆரம்ப முதலே ஆயத்தப்படுத்திப் பக்குவப்படுத்தலாம். புத்தகங்கள் வாங்கித்தந்து வாசிக்க உற்சாகப்படுத்தலாம்.

ஞாயிறு பள்ளிகளின் பாடத்திட்டங்களில் இவைகளை வழக்கமான பாடங்களோடு விசேஷமான பாடங்களாக்கலாம். சபை இவற்றிற்கு ஆரம்பம் முதலே ஆயத்தப்படுத்தப்பட்டு, பயிற்றுவிக்கப்பட்டே ஆக வேண்டும்.

## 3. சம காலங்களிலும் சமீப காலங்களிலும் நடக்கும் உபத்திரவ சம்பவங்களை சபைக்குத் தெரிவித்து நினைவூட்டுதல்:

இந்த நாட்களில் அவ்வப்போது ஆங்காங்கே கேள்விப்படும், பார்க்கும் சம்பவங்கள், வாட்ஸப் வீடியோக்கள், செய்திகளை சபைக்குக் காட்டி, அவர்களுக்குத் தெரிவித்து, மனதளவில் அவர்களை ஆயத்தப்படுத்த வேண்டும். இன்று மற்ற இடங்களில் மற்றவர்களுக்கு நடப்பது, நாளை நமக்கும் நடக்கலாம் என்று கட்டாயம் அவர்கள் பயிற்றுவிக்கப்படுவது அவசியம்.

## 4. உபத்திரவப்படுகிறவர்களுக்காக ஜெபிப்பது :

உலகம் எங்கிலும் உள்ள நசுக்கப்படும் சபைகளுக்காகவும், விசுவாசிகளுக்காகவும் ஜெபிக்கப் பயிற்றுவிப்பது அவசியம். அவர்களது பாடுகளை நமது சபைகள் அறிய வேண்டும். நாமும் உலகளாவிய கிறிஸ்துவின் சரீரத்தின் ஒரு அங்கம் என்றும், சரீரத்தின் ஒரு அங்கம் பாடுபடும்போது, அதின் வலியை மற்ற அங்கங்களும் உணர வேண்டும் என்று கற்றுக்கொடுக்க வேண்டும்.

இந்த நான்கு காரியங்களும் உபத்திரவத்துக்கு சபையை ஆயத்தப் படுத்தி பயிற்றுவிக்கும் சில வழிமுறைகள்.

Chapter 5

# உபத்திரவக் காலத்துக்கு நமது குடும்பங்களை ஆயத்தப்படுத்துவது எப்படி ?

▶▶▶▶ சீன போதகர் லீ யுங் கியாங்

## 1. ஒவ்வொருவரும் அவரவரது மனைவியோடு ஆழமான ஆவிக்குரிய ஐக்கியத்திலும் ஒருமனப்பாட்டிலும் ஜெபிப்பதே முதலாம் ஆயத்தம்.

நாம் சந்திக்கப்போகும் உபத்திரவத்தின் தீவிரம் எப்படிப்பட்ட ஆவிக்குரிய தாக்கத்தை நமக்குள் உண்டாக்கும் என்பதையும், இந்த உபத்திரவங்களிலிருந்து பெற்றுக்கொள்ளும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் மனைவிகள் அறிந்துகொள்ள இந்த ஜெபம் இன்றியமையாததாய் இருக்கும். நாம் ஒரு நாள் கைதாகலாம் என்று நமது மனதை நாமே ஆயத்தப்படுத்திக் கொள்வது மட்டுமல்லாது, நமக்கு அப்படி நடக்கும்போது, அவர்கள் எப்படி தைரியமாய் இருக்க வேண்டும் என்றும் சொல்லிக்கொடுத்து அவர்களைப் பக்குவப்படுத்த வேண்டும்.

## 2. குடும்பத்தின் அன்றாடத் தேவைக்காக ஆயத்தப்படுத்துவது இரண்டாவது.

குடும்பத்தின் அன்றாட வாழ்க்கை மற்றும் தேவைகளுக்காக என்ன செய்வது? வீட்டில் வயதான பெற்றோர் இருந்தால் அவர்களை யார் வசத்தில் விடுவது? பிள்ளைகளுடைய படிப்பு நிறுத்தப்பட்டாலோ, பாதிக்கப்பட்டாலோ, பிள்ளைகள் அனாதை விடுதிகளில் தள்ளப்பட்டாலோ பிள்ளைகள் அதை எப்படி எதிர்கொள்வார்கள் ? சபை ரெய்டு செய்யப்பட்டு, ஆராதனைகள் நிறுத்தப்பட்டால் வருமானத்துக்கு என்ன செய்வது? மனைவி கைது செய்யப்பட்டால் ஜெயிலில் அவளுக்குத் தேவையானதைக் கொண்டு கொடுப்பது யார்? அல்லது சில நாட்களுக்குப் பின் விடுதலையாகும்போது, வீட்டின் புதிய சூழ்நிலையை எப்படி எதிர்கொள்வது ?

## 3. மூன்றாவது, உங்கள் வயதான பெற்றோரும் இப்படிப்பட்ட வரப்போகும் காரியங்களை எதிர்கொள்ளும் வண்ணமாக முன்கூட்டியே அவர்களுக்குச் சொல்லி வையுங்கள்:

முன்பின் தெரியாதவர்கள் வந்து, உங்கள் மகன் இப்படியிருக்கிறார் என்று சொன்னால், அந்தத் தகவலின் உண்மையைத் தன்மையை அறிந்துகொள்ள ஜாக்கிரதையாய் இருக்கும்படிப் பெற்றோருக்குச் சொல்லிவையுங்கள். ‘உங்கள் மகன் தன் விசுவாசத்துக்காகச் சிறை செல்வது என்பது உங்களுக்கு மிகப்பெரிய கௌரவமே தவிர, அது உங்களைத் தலைகுனிய வைக்கும் வெட்கத்தின் காரியம் அல்ல’ என்று சொல்லிக்கொடுங்கள்.

## 4. முன்கூட்டியே பிள்ளைகளை ஆயத்தப்படுத்துங்கள் :

வெறுமனே ஆறுதலின் வார்த்தைகளை மட்டுமே பிள்ளைகளுக்குச் சொல்லாமல், நாம் எதற்காக உபத்திரவப்படுத்தப்படுகிறோம், அவர்கள் முன்னால் கைது செய்யப்பட்டு அடித்து இழுத்துச் செல்லப்படும்போது அதை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்ற யதார்த்தத்தைக் கண்டிப்பாய்ப் பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டும். பெற்றோர் இருவருமே கைது செய்யப்பட்டு அவர்கள் அனாதை விடுதிகளில் கைவிடப்படும்போது, அதுவும் அவர்களது நன்மைக்காகக் கர்த்தர் அனுமதிப்பதே என்றும் அவர்களுக்குச் சொல்லிக்கொடுப்பதோடு, எப்போதும் ஜெபிக்கும்படியாகவும், குறிப்பாக அவர்களுக்காகவும், பெற்றோருக்காகவும் பெரியவர்களுக்காகவும் ஜெபிக்கும்படியாகவும், இவைகள் எல்லாவற்றிலும் கர்த்தர் அவர்களைக் கண்காணித்துப் பாதுகாப்பார் என்றும் கற்றுக்கொடுங்கள்.

## 5. ஐந்தாவது, கூடுமானால் பிள்ளைகள் எப்போதும் கேட்டு பெலமும் தைரியமும் அடையும்படியாக உங்களுடைய ஏதாவது ஒரு வீடியோவோ, ஆடியோ செய்தியோ, குடும்பத்துக்காக எழுதப்பட்ட கடிதத்தையோ விட்டுச் செல்லுங்கள்.

உங்களைப் பிரிந்திருக்கும் காலத்தில், நீங்கள் கைப்பட எழுதின ஒரு கடிதமோ, உங்கள் சத்தம் கேட்கும் ஒரு ஆடியோ செய்தியோ அவர்களுக்கு மிகுந்த ஆறுதலைக் கொடுக்கும். இப்படியாக நீங்கள் கர்த்தருக்குள் அவர்களை ஆறுதல்படுத்தி, அவர்கள் விசுவாசத்தைப் பெலப்படுத்தும்.

## 6. சீனாவில் ஒவ்வொரு நாளும் மாலை 5 மணி ஜெபம் :

இது ஒரு மிக அழகான ஜெப நேரம். இப்படி, நாளின் ஒரு குறிப்பிட்ட வேளையை ஜெப நேரமாக நிர்ணயித்து அநேகர் அதில் இணையும்போது, சிறையில் இருப்பவர்களுக்கும் வெளியில் இருப்பவர்களுக்கும் அதினால் மிகப்பெரிய ஆவிக்குரிய பிரயோஜனமும் உதவியும் உண்டாகும்.

## 7. மற்ற எல்லாக் காரியங்களுக்காகவும் கர்த்தரையே சார்ந்து கொள்ளுவது.

Chapter 6

# உபத்திரவங்களுக்கு ஆயத்தப்படுதல்

## Barnabas Aid

### (A) ஆயத்தம் :

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது ஊழியத்தின் துவக்கத்திலேயே தமது சீஷர்களை உபத்திரவத்தின் நாட்களுக்கென்று ஆயத்தம்பண்ணினார் (மத் 5:10 - 12). ஊழியத்தில் இறுதியிலும் அதையே செய்தார் அவர் (யோ 15: 20,21).

சுய ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் அப்பியாசித்து, கிறிஸ்தவ நம்பிக்கையையே எதிர்நோக்கிப்பார்த்து உபத்திரவ காலத்துக்கு ஆயத்தப்படும்படி அப்போஸ்தலனாகிய பேதுரு விசுவாசிகளுக்கு எழுதுகிறார்.

*1. முன்கூட்டியே எச்சரிக்கப்பட்டு ஆயத்தமாகிக்கொள்வது நம்மை ஸ்திரமாய் நிற்கப்பண்ணுகிறது.*

*இதையே தேவமனிதர்களும், தீர்க்கதரிசிகளும், இயேசு கிறிஸ்துவும் செய்திருக்கின்றனர்.*

*2. அவரை அதிகமதிகமாய் நேசிப்பது நம்மை ஸ்திரமாய் நிற்கப்பண்ணுகிறது.*

*3. விசுவாசம் நம்மை ஸ்திரமாய் நிற்கப்பண்ணுகிறது.*

### (B) ஆவிக்குரிய பரிசுத்த தைரியத்தையும் திடத்தன்மையையும் பெருக்கிக்கொள்வது :

*1. தேவனோடு நம்முடைய உறவு சரியாய் இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.*

*2. உலக இன்பங்களிலிருந்தும் வசதிகளிலிருந்தும் நமது இருதயத்தைத் தூரமாய் விலக்கி வைக்க வேண்டும்.*

*3. சத்துருவைப் புரிந்துகொள்ள வேண்டும்.*

*4. தேவ பிரசன்னத்தை நினைவுகூரும் பழக்கத்தைப் பெருக்கிக்கொள்ள வேண்டும்.*

*5. கோழைத்தனத்துக்கு சாக்குப்போக்காக வினாவுள்ள விவேகத்தை உபயோகிக்காதிருக்க ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.*

*6. உபத்திரவக் காலங்கள் நமது நன்மைக்கே என்று உணர வேண்டும்.*

*7. கிறிஸ்தவ வரலாற்றில் தைரியமாய் நின்ற தேவமனிதர்களின் முன்மாதிரிகைகளை ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும்.*

*8. நமக்கு வாக்களிக்கப்பட்ட பரலோக பிரதிபலன்களை நமக்கு நாமே நினைவூட்டிக்கொள்ள வேண்டும்.*

*9. நமது சத்துருக்களை நேசித்து நம்மை உபத்திரவப்படுத்துபவர்களை மன்னிக்க வேண்டும்.*

*10. கர்த்தராகிய இயேசுவின் மேல் வைக்கும் நமது அன்பை நாளுக்குள் நாள் வளர்த்துக்கொண்டே இருக்க வேண்டும்.*

**(C) தேவன் தூரமாய்க் நிற்கக் காணும்போதும் ஸ்திரமாய் நிற்க வேண்டும்.**

**(D) தேவதூதர்கள் எப்போது வேண்டுமானாலும் நமது உதவிக்கு வரலாம், ஆனால் கிறிஸ்துவை மட்டுமே நோக்கி அவரையே சார்ந்திருக்க வேண்டும்.**

Chapter 7

# அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன்

(Onething alone ministries)

**உபத்திரவத்துக்கும் நசுக்கப்படுதலுக்கும் நடுவே பொன்னாக விளங்கும் விசுவாசிகளிடம் காணப்படும் ஐந்து விசேஷித்த குணாதிசயங்கள்:**

1. நித்தியத்தின் மேல் பதிக்கப்பட்டிருக்கும் கண்கள்.
2. ஆத்தும ஆதாயத்தின் மேலுள்ள அணையாத தாகம்.
3. தேவனையே மையமாகக் கொண்ட ஆவி.
4. தேவ வார்த்தைக்கு அர்ப்பணிப்பு.
5. ஊழியம் செய்ய எப்பொழுதும் ஆயத்தமாயிருத்தல்.

**உபத்திரவத்துக்கு ஆயத்தப்பட நடைமுறை வழிகள்:**

1. வேத வசனத்தை அதிகமதிகமாய் மனப்பாடம் செய்து வைத்துக்கொள்ளுங்கள். வேத புத்தகம் உங்கள் கைகளிலிருந்து பறிக்கப்பட்டுப் போகும், ஆனால் உங்கள் இருதயத்தில் மறைந்திருக்கும் தேவனுடைய வார்த்தையை யாரும் திருடிப் பறிக்க முடியாது.

2. உங்கள் மனம் எதிலே லயிக்கிறதோ, அப்படிப்பட்ட விக்கிரகங்களை நீங்கள் உடைத்தெறியும்படி வாரத்தில் ஒரு நாள் தனியே உபவாசித்து ஜெபியுங்கள்.

3. சபை சரித்திரத்தில் கிறிஸ்துவுக்காகப் பாடு அனுபவித்த தேவ மனிதர்கள் மற்றும் பெண்களின் வாழ்க்கை வரலாற்றை அதிகமதிகமாய்ப் படித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

## உபத்திரவங்களுக்கு ஆயத்தமாகுதல்
## (Holy Sojourners)

*1. உபத்திரவத்தை நூதனமான ஒன்று என்று எண்ண வேண்டாம்.*

*2. உபத்திரவம் சகிக்க வெட்கப்பட வேண்டாம்.*

*3. உங்கள் கண்களைப் பரலோகத்தின் மீதே வையுங்கள்.*

*4. உங்கள் ஊழியத்தில் கவனம் செலுத்துங்கள்.*

*5. சரியான, தேவையான வேளையிலே நிச்சயமாய்க் கிருபை கிடைக்கும் என்று நம்பியிருங்கள்.*

*6. எப்போதும் சபை மட்டுமே ஜெயங்கொண்டது என்று மறவாமல் நினைத்துக்கொள்ளுங்கள்.*

# உபத்திரவக் காலத்துக்கு முன்பாக மனப்பாடம் செய்து வைத்திருக்க வேண்டிய வேத பகுதிகள் :

---

## புதிய ஏற்பாடு

### மத்தேயு

- மத்தேயு - 5, 6, 7 முழு அதிகாரங்கள்
- மத்தேயு 10: 16 - 33, 37 - 39
- மத்தேயு 17: 1 - 6/ 19: 27 - 30
- மத்தேயு 23 - முழு அதிகாரம்
- மத்தேயு 24: 1 - 14 / 26: 36 - 50 / 27: 1-50
- மத்தேயு 28 - முழு அதிகாரம்

### மாற்கு

- மாற்கு 8: 31 - 38
- மாற்கு 16 - முழு அதிகாரம்

### லூக்கா

- லூக்கா 1: 68 - 80 / 1: 46 - 55
- லூக்கா 3: 1-9
- லூக்கா 4: 1 - 13
- லூக்கா 10: 1 - 24 / 11: 1 - 4 / 12 : 22 -32
- லூக்கா 15: 26-35 / 16: 19 - 31/ 17: 22 - 37
- லூக்கா 21 - முழு அதிகாரம்
- லூக்கா 22: 14 - 20, 31-33

*உபத்திரவக் காலத்துக்கு முன்பாக மனப்பாடம் செய்து வைத்திருக்க வேண்டிய வேத பகுதிகள் :*

## யோவான்

- யோவான் 10 : 1 - 18
- யோவான் 11: 1 - 45
- யோவான் 12:1-8, 23 - 33
- யோவான் 14: 1 - 18, 26 - 29
- யோவான் 15 & 16 - முழு அதிகாரங்கள்

## அப்போஸ்தல நடபடிகள்

- அப்போஸ்தலர் 4 : 24 - 31
- அப்போஸ்தலர் 7: 54 - 60
- அப்போஸ்தலர் 9: 1 - 16
- அப்போஸ்தலர் 18 : 9, 10/ 20: 19 - 24
- அப்போஸ்தலர் 23:11 / 27 : 20 - 25

## ரோமர்

- ரோமர் 5 : 1 - 5 /
- ரோமர் 8 : 36 - 39
- ரோமர் 12:1, 2 / 12: 6 - 21

## 1 கொரிந்தியர் & 2 கொரிந்தியர்

- 1 கொரிந்தியர் 13 - முழு அதிகாரம்
- 2 கொரிந்தியர் 1: 4 - 10/ 2 : 14, 15
- 2 கொரிந்தியர் 4 : 14 - 18/ 5 : 1 - 10
- 2 கொரிந்தியர் 6:3 - 10/ 11 : 23 - 30
- 2 கொரிந்தியர் 12 : 9, 10, 11

*உபத்திரவக் காலத்துக்கு முன்பாக மனப்பாடம் செய்து வைத்திருக்க வேண்டிய வேத பகுதிகள் :*

## நிருபங்கள்

- கலாத்தியர் 5: 22 - 24
- எபேசியர் 6: 18 - 20
- பிலிப்பியர் 2: 1 - 10/ 3 : 20, 21,
- பிலிப்பியர் 4 : 4 - 9, 11 - 13
- கொலோசேயர் 1:24 / 3 :16, 17
- 1 தெசலோனிக்கேயர் 3: 2 - 4 / 5: 14 - 18
- 2 தெசலோனிக்கேயர் 1:3 - 12 / 2: 16, 17
- 1 தீமோத்தேயு 2 : 1 - 6 / 6 : 1 - 16
- 2 தீமோத்தேயு 1: 7 - 14 / 2 : 1 - 3 / 4: 5 - 8, 17, 18
- தீத்து 2: 7, 8, 11- 14
- எபிரேயர் 10: 32 - 39
- எபிரேயர் 11 - முழு அதிகாரம்
- எபிரேயர் 12: 1 - 14, 28, 29 / 13: 5, 6
- யாக்கோபு 1: 2 - 4 , 12 / 5 : 10 - 16
- 1 பேதுரு 1:3 - 9, 22 - 25
- 1 பேதுரு 2 : 19-25 / 3: 8 - 18
- 1 பேதுரு 4: 1, 2, 12 - 14 / 5: 7 - 10
- 2 பேதுரு 1: 2 - 8
- 1 யோவான் 3: 11 - 16 / 4: 7 - 16
- யூதா 20 - 25

## வெளிப்படுத்தின விசேஷம்

- வெளி 1:6 - 20 / 2 : 2, 3, 9 - 11, 19
- வெளி 2 : 25 - 29 / 3:7, 8 - 12 / 6: 10, 11
- வெளி 7: 9 - 17 / 12 : 10 - 12 / 14 : 13
- வெளி 19:7 - 9 / 21: 1 - 7, 10 - 27
- வெளி 22: 1 - 7, 11 - 17

*உபத்திரவக் காலத்துக்கு முன்பாக மனப்பாடம் செய்து வைத்திருக்க வேண்டிய வேத பகுதிகள் :*

## பழைய ஏற்பாடு

### சங்கீத புஸ்தகங்களின் முழு அதிகாரங்கள்

- சங்கீதம் 1, 2, 7, 9, 16, 18, 20, 22, 23 - முழு அதிகாரங்கள்
- சங்கீதம் 27, 34, 37, 41, 42, 46, 51, 57 - முழு அதிகாரங்கள்
- சங்கீதம் 61, 62, 63, 70, 73, 74, 77, 80 - முழு அதிகாரங்கள்
- சங்கீதம் 83, 84, 89, 91, 97, 103, 104, 107 - முழு அதிகாரங்கள்
- சங்கீதம் 121, 124, 132, 136, 139 - முழு அதிகாரங்கள்
- சங்கீதம் 143, 147, 148, 150 - முழு அதிகாரங்கள்

### யோபு

- யோபு புத்தகத்தின் முழு 42 அதிகாரங்களும்

### புலம்பல்

- புலம்பல் புத்தகத்தின் முழு 5 அதிகாரங்களும்

### ஏசாயா

- ஏசாயா - 39, 40, 41, 42, 43, 44, 45, 46, 47 - முழு அதிகாரங்கள்
- ஏசாயா - 53, 60 - முழு அதிகாரங்கள்

# மொழிபெயர்ப்புகள்:




ஒரு கைதியின் டைரி
[ ஹெரலன் பாப்போவ் -
Tortured for his Faith ]




கேட்டகோம்ப்ஸ்
இரத்தசாட்சிகள்
[ Martyrs of Catacombs ]




நீ எனக்கு தண்டாயுதமும்
அஸ்திராயுதமுமானவன்
[ Thou art My battle Axe -
Dr. Paul Enenche ]




கொலையுண்ணப்
போகிறவர்களை விடுவி !
[ He Came To Set The
Captives Free - Dr. Rebecca Brown ]

## புத்தகங்கள் கிடைக்குமிடம் :

**MRS. JENIFER ROMILTON**
246-B, Pocket-C, Mayur Vihar, Phase -2, Delhi-110091.
Cell: 9810646981 / 9990103010

# மொழிபெயர்ப்புகள்:




ரேவன்ஹில்
பேஜஸ்




என்றும் தணியும்
இந்த எழுப்புதல் தாகம்?
[ Rev. லியோனார்ட் ரேவன்ஹில் ]




உடைத்தெறி
[ Breakthrough -
Rudy Lack ]




எழுப்புதல்
எழுத்துக்கள்
[ Assorted Revival Notes ]

## புத்தகங்கள் கிடைக்குமிடம் :

**MRS. JENIFER ROMILTON**
246-B, Pocket-C, Mayur Vihar, Phase -2, Delhi-110091.
Cell: 9810646981 / 9990103010

# ஆசிரியரின் பிற நூல்களும் கட்டுரைகளும்:




என் தகப்பனே என் தகப்பனே !
இஸ்ரவேலுக்கு இரதமும்
குதிரை வீரருமானவரே !




என் மகனாகிய
அப்சலோமே !
என் மகனே ! என் மகனே !




விக்கினத்தின்
மேல் விக்கினம்




சமயம் வாய்த்தாலும்
வாய்க்காவிட்டாலும்...




நீதிமான் மரிப்பதுபோல
நான் மரிப்பேனாக !




முற்பிதாக்களின்
எழுப்புதல் ஏடுகள்

# ஆசிரியரின் பிற நூல்கள்




உடைத்தெறி




இரத்தத்தின் சத்தம்



இரத்தத்தின் இரத்தம்




சிவந்த மண்



காத்துக்கொண்டால்
காத்துக் கொள்வேன்




எமர்ஜென்ஸி

# எழுப்புதல் ஏவுகணைகள்

எழுப்புதல் வீரர்களின் என்றும் அழியா எழுத்துக்கள்...





















# ஆசிரியரின் பிற நூல்களும் கட்டுரைகளும்:










இனிமேல்
சம்பவிக்கப்போகிறது
என்ன ?

இந்து தேசம்
முதல்
இந்துத்துவா வரை...

மீண்டும்
ஒரு
மிஸா ?










மிஷன் 2024

குருதிப் பிரளயம்

முற்பிதாக்களின்
எழுப்புதல் ஏடுகள்










முற்பிதாக்களின்
எழுப்புதல் ஏடுகள்

இதோ நாட்கள்
வருகிறது !

நாட்கள்
எண்ணப்படுகிறது

# ரிவைவா

## ஒரு எழுப்புதல் பயிற்சிப் பாசறை

## வெளியீடுகள்




எழுப்புதலின் அடிப்படைகள்,
ஆரம்பப் பாடங்கள்,
ஆணி வேர்கள்.

ரிவைவல் 66
வேத புத்தகத்தின்
66 எழுப்புதல்கள்

ரிவைவல் 66 ( பகுதி 2 )
வேத புத்தகத்தின்
66 எழுப்புதல்கள்

எழுப்புதல் 300
சபை சரித்திரம் கண்ட
300 எழுப்புதல்கள்




எழுப்புதலும்
மிஷனரி வரலாறும்

எழுப்புதலும் ( பகுதி 2 )
சுருக்கமான சபை சரித்திரமும்

எழுப்புதலும் வரப்போகும்
நாட்களும் ( பகுதி 1 )

எழுப்புதலும் இன்றைய
நாட்களும் ( பகுதி 2 )

### புத்தகங்கள் கிடைக்குமிடம்

## அடைபட்ட அக்கினி

246-B, Pocket-C, Mayur Vihar, Phase-2, Delhi-110091
Cell: 98106 46981 / 99901 03010

# ஆசிரியரின் பிற நூல்களும் கட்டுரைகளும்:

- வருகைக்கு முன்னான வசந்தம்
- யோவேல் மறவேல்!
- ஹிட் லைக் ஹிட்லர்
- இதோ நீர் சொன்னபடியே சம்பவிக்கிறது !
- நீதிமான் மரிப்பதுபோல நான் மரிப்பேனாக !
- ஆத்துமப்பிணைப்பு (Soul Tie)
- விழுந்து நொறுங்கிய விக்ரம் லேண்டர்
- கறுப்பு பெந்தெகோஸ்தே
- ஆரம்பகால இரத்தசாட்சிகள்
- அந்த ஏழை மனிதனை நினைப்பாரில்லை..
- எழுதிவைத்தான் எசேக்கியா!
- எனக்கு உண்டானவைகளில் நான் பெற்றுக்கொள்ளாதது யாது?
- தேவனின் அசையாச் சொத்து
- திரை உலகே ! கலை உலகே !




**Pastor. Romilton**
Delhi
Mob: +91 98106 46981

LIVING CREATION



# எமர்ஜென்ஸி

- ஜலப்பிரளயத்துக்குத் தன்னையும் தன் குடும்பத்தையும் ஆயத்தப்படுத்தினான் நோவா..

- கொடிய பஞ்சத்துக்கு முன்னால் தன்னையும் தன் தேசத்தையும் ஆயத்தப்படுத்தினான் யோசேப்பு..

- மிகப்பெரிய இனப்படுகொலை ஒன்றுக்கு முன்னாகத் தன் ஜனத்தைக் காக்கும்படி, தன்னையும் தன் ஜனத்தையும் ஆயத்தப்படுத்தினாள் எஸ்தர்..

- கடைசிக்கால நிகழ்வுகளை முன்னெச்சரித்துத் தமது சீஷரை ஆயத்தப்படுத்தினார் இயேசு..

நமது வாசலைத் தட்டி நிற்கப்போகும் ஆபத்துகளுக்கு நம்மையும் நமது சபைகளையும் ஆயத்தப்படுத்தும் கடைசி நிமிட எச்சரிப்பின் துளிகள் இவை!

நோவாவின் தேவனும், யோசேப்பின் தேவனும், எஸ்தரின் தேவனும், இயேசு கிறிஸ்துவின் பிதாவுமானவர், நமது தேவனாயிருந்து, வரப்போகும் குருதிப்பிரளயத்துக்கும், ஆவிக்குரிய மா மகா பஞ்சம் ஒன்றுக்கும், நமது ஆவிக்குரிய ஜனத்தின் மேல் வரும் பொல்லாப்புக்கும், கிறிஸ்தவக் குலத்துக்கு வரும் அழிவுக்கும் நம்மை எச்சரித்து ஆயத்தப்படுத்த நமக்குத் தந்திருக்கும் நுண் குறிப்புகள் இவை!

EMERGENCY

**அடைபட்ட அக்கினி**
246- B, Pocket - C, Mayur Vihar, Phase -2,
Delhi - 110091. **Mob : 98106 46981**

பாஸ்டர். **S.ரொமில்ட்டன்**